என் எண்ணம்

# பெற்ற மகளிடம் தந்தை கற்ற பாடம்

— ஆசிரியர் கடிதம்

அன்புடையீர்!

வணக்கம்.

மார்ச் 8 தேதி உலகம் முழுவதும் மகளிர் தினம் கொண்டாடப் படுகின்றது. அன்றைய தினம் கருத்தரங்குகள், மாநாடுகள், விருது வழங்கும் விழாக்கள் என கோலாகலமாகக் கொண்டாட்டத்துடன் மகளிர் சமுதாயம் போற்றப்படுகின்றது. பெண் என்பவள் ஆணுக்குப் பல உறவுகளில் அழைக்கப் படுகின்றாள். மகனுக்குத் தாயாக, தந்தைக்கு மகளாக, தம்பிக்கு அக்காளாக, அண்ணனுக்கு தங்கையாக, கணவனுக்கு மனைவியாக வாழ்நாள் முழுவதும் உடன் வாழ்கின்றாள். இதன் கிளை உறவுகளாக பாட்டி, அத்தை, சித்தி, மாமி, பெரியம்மா எனப் பல்வேறு உறவுகள் இருந்தாலும், தந்தை மகள் உறவுதான் உன்னதமான உறவாகப் போற்றப் படுகின்றது.

பெண் குழந்தை பிறந்தவுடன் " எங்கம்மாவே வந்து பொறந்துட்டா" என்று குதூகலிப்பில் சிலிர்ப்புடன் துள்ளும் அப்பா. பின்னர் அந்தக் குழந்தையின் ஒவ்வொரு வயதிலும் அவளது வளர்ச்சி கண்டு பெருமிதப்படும் அப்பா, அந்தப்பெண் பூப்பெய்தவுடன் அப்படியே மாறிப்போய் விடுகின்றார். அதுவரை தன்னோடு தனக்காக, தன்னை மட்டுமே தொடர்ந்து வரும் மகள் அதன்பிறகு தந்தைக்குப் பாடம் கற்றுத் தரும் ஆசானாக மாறி விடுகின்றாள்.

ஆணென்ன, பெண்ணென்ன எல்லாம் ஓரினம் தான் என அண்மைக் காலமாக ஒப்புக் கொள்ளப்பட்டாலும் ஆண் வேறு, பெண் வேறே! இருவருமே தாயின் வயிற்றில் பத்து மாதங்கள் வளர்கிறார்கள் என்றாலும் ஆண்குழந்தைகள் சீக்கிரமே பிறந்துவிடுவார்கள் என்கிற வழக்கும் உள்ளது.

ஆண்குழந்தை பிறந்தால் கவலை இல்லை; பெண்ணாகப் பிறந்தால் அனைவருக்குமே கவலை என்பார்கள். இந்த வழக்கு அன்றில் தொடங்கி இன்றும் தொடர்கிறது. ஒரு பெண் சரியாக வளர்க்கப்படவில்லை என்றால் தாயைக் குறை கூறினாலும், பெரும்பங்கு தந்தைக்கும் உண்டு. வயதுக்கு வரும் வரை பெண்கள் வளர்ப்பில் பெரிய வித்தியாசம் இருக்காது. பிடித்தமானதை வாங்கிக் கொடுப்பதோடு ஒரு அப்பாவின் கடமை முடிந்து விடும். இதுவே அந்தப்பெண் வயதுக்கு வந்துவிட்டால் அவளுக்கேற்ற மணமகனைத் தேர்வு செய்வது உள்பட பல விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டி உள்ளது. காலாகாலத்திற்குள் வீடு திரும்பவில்லை என்றால் தந்தைக்கு வயிற்றில் புளியைக் கரைத்து விடுகின்றது.



அதிலும் வயதுக் குவந்த மகள் காதல் வயப்பட்டதாக அறிந்தால் அவர் யாரோ எவரோ, என்ன ஜாதியோ, என்ன வேலை செய்கிறாரோ? தமது மகளுக்குப் பொருத் தமானவரா என்று பல சிந்தனை கள் அடுத்தடுத்து ஒரு தந்தையின் தூக்கத்தைக் கெடுத்துவிடுகின்றன.

ஒரு காலத்தில் வேறு இனம் மதம் என்றால் அந்தப் பெண்ணின் திருமணத்திற்குச் சம்மதமே கிடைக்காது. ஆனால் இன்றைக்கு இந்த நிலைமை பெரிதும் மாறி இருக்கிறது. தன் மகள் நன்றாக வாழ வேண்டும் என ஒரு அப்பா ரொம்பவே மெனக்கெட வேண்டி இருக்கிறது.

பையனின் வீடு தேடிப் போய், பெற்றோரின் கையைக் காலைப் பிடிக்கிற வேதனை பெண்ணின் தந்தைக்கு. அப்படியே மணமானாலோ வாழ்கிற வீட்டில் தனிக் குடித்தனம் என்றால் பிரச்சினை இல்லை; கூட்டுக்குடித்தனத்தில் மாமனார் மாமியார் மைத்துனர் நாத்தனார் என அத்தனைப் பேரையும் அந்தப் பெண் சமாளித்தாக வேண்டிய கட்டாயம் உள்ளது. இங்கும் ஒரு அப்பாவுக்குத் தலைக்குனிவு ஏற்படுகின்றது. தன் பெண்ணைப் பற்றித் தன்னிடமே தரக்குறைவாகக் கூறினால் எந்தத் தந்தையால் பொறுத்துக் கொள்ள முடியும். பதிலுக்கு ஏதாவது பேசப்போகத் தனது மகள் வாழ்க்கை பாழாகிவிடுமே எனப் பேசாமல் இருக்கிற அப்பாவி அப்பாவையும் பார்க்கமுடியும். ஒரு பேரனோ, பேத்தியோ பார்க்கிற வரை அந்த அப்பாவிற்குத் தூக்கம் ஏது?

பெண்ணையும் கொடுத்து, அவளது கணவன் வீட்டாரின் மனம் கோணாமல் பார்த்து அந்தத் தந்தை படுகிற வேதனை இருக்கிறதே, அப்பப்பா சொல்லில் வடிக்க முடியாது. அந்தப் பையன் குடிகாரனாகவோ, பொறுக்கியாகவோ இருந்து விட்டால் அந்தத் தந்தை படுகிற வேதனை பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

தனது மகள் நன்றாகக் கணவன் வீட்டில் வாழ்கிறாள் என்று கேள்விப்படுகிற தந்தை நிம்மதிப்

பெருமூச்சு விடுகின்றார். மற்ற அப்பா மார்கள் எல்லோருக்குமே வேதனைதான்.

ஒரு தந்தையானவர் படுகின்ற வேதனைகளைப் பெண்ணானவள் உணரவேண்டும். காதல், கத்தரிக்காய் என்று ஒரு தந்தைக்குப் பாரம் ஏற்றி விடக்கூடாது...

### அப்பா -_ மகள் உறவினை விளக்கும் ஒரு சம்பவம்

தன் மகளை சில விசயங்களுக்காக அடிக்கடி கடிந்து கொள்வதால் அவள் அப்பாவிடம் கேட்டாள்... ஏம்பா என்னை இப்படி கண்டிப்புடன் நடத்துகிறீர்கள்...??? என்னை கொஞ்சம் சுதந்திரமாக விடலாமே என்று...ஆனால் அதை அப்பா சற்று கஷ்டமாகவே உணர்ந்தார்... இதை எப்படி இவளுக்கு சொல்லிக்கொடுப்பது என யோசித்தார்...ஒரு நாள் மகள் தன் தகப்பனிடம் வந்து கேட்டாள்.. அப்பா நான் பட்டம் விட்டு விளையாட போகிறேன், நீங்களும் வாங்க.., என அழைத்துக்கொண்டு வீட்டின் மொட்டை மாடிக்கு சென்றாள்...* பட்டத்தை நூலில் கட்டி பறக்கவிட்டு மகிழ்ந்தாள்... அப்படி மகிழ்திருக்கும் வேளையில் அப்பா கேட்டார்... பட்டம் மேலே பறக்க, பறக்க அழகாய் இருக்கிறது.... ஆனால் அதன் விருப்பம்போல பறக்க முடியவில்லை.. அதற்கு தடையாய் இருப்பது என்னம்மா??? என கேட்டார்.. மகள் பட்டென பதில் சொன்னாள் இந்த நூல் தான் அப்பா அதை தன் இஷ்டத்திற்கு விடாமல் கட்டி வைத்திருக்கிறது என்று சொன்னாள்... அப்படியா என கேட்டுவிட்டு அந்த நூலை அப்படியே அறுத்து விட்டார்... பட்டமும் தன் இஷ்டபடி பறந்தது. ஆனால் சற்று நேரத்திலேயே கிழிந்த காகிதமாய் கீழே விழுந்தது...* அப்பா சொன்னார்.. மகளே.. இந்த பட்டத்தை தன் இஷ்டபடி பறக்கவிடாமல் தடுக்கவில்லை... நேரான வழியில் இந்த பட்டம் பறந்து உயரங்களை கீழடக்க இந்த நூல் உதவியாய் இருக்கிறது...* இதேபோலத்தான் மகளே உன் அப்பாவாகிய நானும் ஒரு நூல்தான்... நீதான் அந்த பட்டம்... நீ என்னுடைய பேச்சை கேட்டு அதன்படி நடப்பாயெனில் என் பாதுகாவலுடன் உயர பறக்கலாம்... உன் இஷ்டப்படி வாழ நினைத்தால் அந்த பட்டம் கிழிந்து காகிதம் ஆனதுபோல உன் வாழ்க்கையும் சீரழிந்துவிடும்... இப்போது புரிந்திருப்பாய் ஏன் உன்னை கண்டித்தேன் என்பதனை... நூலாகிய என்னை அறுத்துவிடாதே என்று சொல்லும்போதே மகள் தன் அப்பாவை கட்டி அணைத்துக் கொண்டாள்...!!!*

ஆம் அன்பான பிள்ளைகளே... உங்களுக்கு இனிமையாய் தோன்றுகின்ற வழிகள் ஏராளம் இருக்கலாம்.. ஆனால் அவற்றின் முடிவு பயங்கரமானது... எனவே பெற்றோருக்கு கீழ் படிந்து வாழ கற்றுக் கொள்ளுங்கள் உங்கள் இனிய வாழ்வு உங்களை வரவேற்கும்...!!!* அப்பா அம்மாவின் அன்பும், கண்டிப்பும் இருந்தால் மகள், மகனின் வாழ்வு இனிமையாக அமையும்.*


# மித்ரா டைம்ஸ்

மாத இதழ்

மித்ரா 3 மார்ச் 2018 டைம்ஸ் 10

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்
**தம்பி முருகானந்தம்**
9381788645
9789837069

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**

செய்தியாளர்கள்
ஒருங்கிணைப்பாளர்
**கவிஞர் மணிபாரதி**
8610134970

முதன்மை செய்தியாளர்
K.V. **ஈஸ்வரி**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

**வடிவமைப்பு**
சிவா செளந்தர்,
திருமதி.நிரோஷாதிலிப்

**விளம்பரம், சந்தா தொடர்புக்கு**
044-23743007/8

**அலுவலகம்:**
001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை94.
போன் : 044-23744661,23743007/8

**Whatsapp No. 8248585067**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**

ஸ்ரீ தேவி! பக்கம் 6



கண்ணதாசன் பக்கம் 8



மு.க.ஸ்டாலின் பக்கம் 10



24 மணிநேரம் டாஸ்மாக் பக்கம் 18



கபாலிகான் நியூஸ் பக்கம் 20



சின்னத்திரையில் தொழிலதிபர்கள்! பக்கம் 44



## சிவகாசியில் மலர்ந்து...
## துபாயில் உதிர்ந்த...
## செந்தூரப் பூவே

# ஸ்ரீ தேவி!



திரைத் துறையில் பெண்கள் நீண்ட காலம் நிலைத்து நிற்பது என்பது அதிசயமே.

காரணம் ஆணாதிக்கம் நிறைந்த துறை அது. அந்தக்கால திரைப்படங்களில் கதாநாயகர் செருப்பு அணிந்திருப்பார் எந்த சூழ்நிலையிலும் அது காடோ , வெயிலோ, சேறோ, சகதியோ, கதாநாயகி செருப்பை அணியக்கூடாது. அத்தகைய துறையில் நான்கு வயதில் தொடங்கி தனது ஐம்பத்து நான்கு வயது வரை ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் திரைத்துறையில் வெற்றி கொடி நாட்டிய சாதனைப் பெண்மணி தான் நடிகை ஸ்ரீதேவி.

1963 அகஸ்ட் 13ம் தேதி சிவகாசி அருகில் உள்ள மீனம்பட்டியில் பிறந்தவர் ஸ்ரீதேவி.

1967ல் வெளிவந்த கந்தன்கருணை திரைப்படத்தில் ஜெயலலிதாவின் மடியில் அமர்ந்து நடித்திருப்பார் ஸ்ரீதேவி.

1979 குழந்தை நட்சத்திரமாக அவர் துணைவன் என்ற படத்தில் அறிமுகம் அகியிருந்தாலும் அவர் எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஆகியோருடன் குழந்தை நட்சத்திரமாக நடித்ததுதான் சிறப்பாக பேசப்பட்டது.

நம்நாடு என்ற படத்தில் "நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே! நம் நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளே!" என்று எம்ஜிஆர், பாடும் போது உடன் ஸ்ரீதேவியும் நடிகை குட்டி பத்மினியும் நடிப்பார்கள். அந்த பாடலை போலவே ஸ்ரீதேவியும் பிரபலம் ஆனார்.

பாபு என்ற திரைப்படத்தில் சிவாஜி பாடும் "இதோ எந்தன் தெய்வம் முன்னாலே நான் ஒரே ஒரு புன்னகையில் கண்டேனே" என்ற பாடல் ரசிகர்கள் மத்தியிலே பெரிய வரவேற்பைப் பெற்றது. அந்த பாடலில் இடையே வரும் புன்னகை என்ற வார்த்தைக்கு ஸ்ரீதேவியின் சிரிப்பில் அர்த்தத்தை காணலாம்.

பின்னர் கதாநாயகியாக 16 வயதினிலே திரைப்படத்தில் அவரை பாரதிராஜா அறிமுக படுத்தினார் அந்தப் படம் சப்பாணியாக நடித்த கமலுக்காகவும், பரட்டையாக நடித்த ரஜினிக்காகவும் ஓடியதை விட ஸ்ரீதேவியின் கள்ளமில்லா வெள்ளை சிரிப்பில் பாடும் "செந்தூரப் பூவே என்ற பாடல்களுக்காகவே ஓடியது. தமிழ் திரையுலகில் கால்பதித்து வெற்றிக் கொடி நாட்டிய


நம் நாடு படத்தில் எம்.ஜி.ஆருடன்


பாபு படத்தில் சிவாஜியுடன்



கந்தன்கருணை படத்தில் ஜெயலலிதாவின் மடியில்



மூன்றாம் பிறை படத்தில் கமலுடன்



ரஜினியுடன் ஜானி படத்தில்



இங்கிலீஷ் விங்கிலீஷ் தல அஜித்துடன்

ஸ்ரீதேவி தெலுங்கு, மலையாளம், இந்தி, என பல மொழிகளில் பிரபலம் ஆனார்.


இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் அஜித் நடித்த இங்கிலீஷ் விங்கிலீஷ் என்ற படத்திலும், நடிகர் விஜய்யுடன் புலி திரைப்படத்திலும் நடித்தார். திரையுலகில் கொடிகட்டி பறந்த எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெயலலிதா, கமல், ரஜினி, அஜித், விஜய்,ஆகிய முன்னணி நடிகர்களுடன் நடித்த ஒரே நடிகை ஸ்ரீ தேவியாகத் தான் இருக்கும். இன்னும் ஒரு சிறப்பாக கவிஞர் கண்ணதாசன் தனது கடைசி பாடலான "கண்ணே கலைமானே என்ற மூன்றாம் பிறை படத்தில் நடித்து தேசிய விருது பெற்றவர் ஸ்ரீ தேவி அவர்கள்.

பெரும்பாலும் நடிகைகள், குடும்ப உறவுகளோடு பின்னி பிணைந்து இருப்பது அபூர்வம் ஆனால் நடிகை ஸ்ரீதேவி இந்தி நடிகர் போனிகபூரை திருமணம் செய்து கொண்டு இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயாகவும் இருந்து திரைப்படத்தை தொடர்ந்தார். சமிபத்தில் ஒரு திருமணத்திற்காக துபாய் சென்ற நடிகை ஸ்ரீதேவி மரணம் அடைந்து அவரது உடல் மும்பை கொண்டுவரப்பட்டு தகனம் செய்ப்பட்டது. அவரது மரணத்தில் சர்ச்சைகள் ஏற்பட்டாலும் திரையில் அவரது சாதனைகளை மறக்கவோ மறுத்திடவோ முடியாது.

திருமதி. சுஜாதா மூர்த்தி



புலி படத்தில் விஜயுடன்



கணவர், இரண்டு மகள்களுடன்







# நாத்திகன் கண்ணதாசன் ஆத்திகரானார்!

## அர்த்தமுள்ள இந்துமதம் உருவான விதம்.

சாண்டோ சின்னப்ப தேவரும் கண்ணதாசனும் ஒருபடப்பிடிப்பு சம்பந்துமாக காரில் போய்க் கொண்டிருந்தபோதுமிக மோசமான விபத்து ஏற்பட்டது. அதில் சின்னப்பாதேவருக்கு அவ்வளவாகக் காயம் இல்லை. ஆனால் கண்ணதாசனுக்கு படுகாயம் ஏற்பட்டு நினைவிழந்த நிலையில் மருத்துவமனையில் இருந்தார்.

காஞ்சிப் பெரியவரிடம் மிகுந்த பக்தியும் மரியாதையும் கொண்ட தேவர் அவர்கள், சிவஸ்தானம் எனப்படும் பிரம்மபுரீஸ்வரர் கோவிலில் பெரியவரைப் பார்த்து வணங்கி 'விபத்து நேர்ந்து விட்டது' என்று சொன்ன மாத்திரத்தில் 'கண்ணதாசன் எப்படியிருக்கிறான்' என்றும் பெரியவர் கேட்க, அதிர்ந்து போனார் தேவர். கண்கள் கலங்க வியப்பும் வருத்தமுமாய் "அவர் படுகாயத்துடன் நினைவில்லாமல் மருத்துவமனையில் இருக்கிறார்" என நா தழுதழுக்கக் கூறினார்.தேவரின் கவலையை உணர்ந்த பெரியவர், 'சரி, கவலைப்படாதே. இந்த விபூதியைக் கொண்டுபோய்,அவன் நெற்றியில் இட்டு, வாயிலும் சிறிதளவு போடு, மீதி இருப்பதை அவன் தலையணைக்குக் கீழ் வைத்துவிடு' என்று தன் திருக்கரங்களால் விபூதி எடுத்து மடித்துத் தர,தேவர் விதிர் விதிர்த்து, பெரியவரை மறுத்துப் பேசவும் துணிவின்றி தயங்க, மீண்டும் பெரியவரின் கட்டளைக்கிணங்கி தயக்கத்தோடு கைநீட்டி விபூதியைப் பெறுகிறார்.

தேவரின் தயக்கத்திற்குக் காரணம், கண்ணதாசன்நாத்திகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு, திராவிட கட்சிகளின் சார்பில் பிராமணர்களையும் சனாதன தர்மத்தையும் நாக்கில் நரம்பில்லாது போல் மேடைகளில் பேசி வந்த காலகட்டம் அது. விபத்து நடந்த ஒரு வாரத்திற்கு முன்புதான் காஞ்சிபுரம் சங்கர மடத்திற்கு எதிரிலேயே நடந்த கூட்டத்தின் மேடையில் படுபயங்கரமாகப் பேசி மடாதிபதிகளை இழிவுபடுத்திப் பேசியிருந்தார். எனவே அவரிடம் போய் இந்த விபூதியை

எப்படிக் கொடுப்பது என்பதுதான் தேவரின் பெரியத் தயக்கமாயிருந்தது.

ஆனால் முக்காலமுணர்ந்த ஞானியாகிய பெரியவர், தேவரின் மனத்தயக்கத்தை உணர்ந்து 'தயங்காமல்கொண்டுபோய் பூசு. சூரியனை சில சமயம் மேகம்மறைப்பது போல் நாத்திகமேகம் இதுவரை அவனை மறைத்திருந்தது. இனி அவன் சூரியனாகத் திகழ்வான். அவன் எப்பேர்ப்பட்ட பரம்பரையைச் சேர்ந்தவன் தெரியுமா? கோவில் திருப்பணி செய்வதற்கே பிறந்தவர்கள் போல் திகழ்ந்தவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள். வரதராஜப் பெருமாள் கோவில் கோபுரத் திருப்பணியைச் செய்தவர் கண்ணதாசனின் கொள்ளுத் தாத்தா. ஏகாம்பரநாதர் கோவில் திருப்பணியைச் செய்தவர் கண்ணதாசனின் தாத்தா. காமாக்ஷி கோவில் திருப்பணியைச் செய்தவர் கண்ணதாசனின் தகப்பனார். இப்ப புரியறதா?' என திருவாய் மலர்ந்தருளினார். தேவர் மனந்தெளிந்தவராய் பெரியவரை வணங்கி விடைபெற்று, நேராக மருத்துவமனைக்குச் சென்றார்.

நினைவிழந்து படுத்திருந்த கண்ணதாசனின் நெற்றியில் விபூதியைப்பூசிவிட்டு சிறிது விபூதியை வாயிலும் இட்டு, மீதியை தலையணையின் கீழ் வைத்துவிட்டு வீடு திரும்பினார். அவர் சிந்தனையெல்லாம் கண்ணதாசன் நினைவு திரும்பி நடந்ததை அறிந்து என்ன சொல்வாரோ என்றே நினைத்தது.

மறுநாள் தேவர் மருத்துவமனை சென்று கண்ணதாசனின்படுக்கையை சற்றே படபடக்கும் நெஞ்சோடு நெருங்கியபோதுகண்ணதாசனுக்கு நினைவு திரும்பி கண் விழித்திருந்தார். தேவரைப் பார்த்தவுடன், 'வாங்க, எத்தனை நாளா இப்படி படுக்கையில் இருக்கேன். கொஞ்சம் கண்ணாடியை எடுத்துக்கொடுங்களேன். என் முகத்தைப் பார்க்கணும்' என்றார். நேற்று இட்ட விபூதி இன்னமும் நெற்றியில் திகழ, தேவர் தயங்கியபடியே தந்த கண்ணாடியில் தன் முகம் கண்ட கண்ணதாசன் 'இதென்ன விபூதி?' என்று தேவரை ஏறிட்டுப் பார்க்க, வேறு வழியின்றி வந்தது வரட்டுமென தேவர், தான் பெரியவரைப் பார்த்ததையும், பெரியவர் ஆசீர்வாதம்செய்து விபூதி கொடுத்ததையும் சொல்ல, கண்ணதாசனின் விழிகளில் அருவியெனக் கொட்டியது கண்ணீர்.திகைத்து நின்ற தேவரின் செவிகளில் தேனாகப் பாயந்தது கண்ணதாசனின் வார்த்தைகள் 'எனக்கா? என்னிடமா இவ்வளவு கருணை? போனவாரம்தான் அவரை, ஐயோ' என வாய்விட்டுப் புலம்பி அழுததோடு, தேவரிடம் ஒரு வேண்டுகோளையும் சமர்ப்பித்தார். 'எனக்கு உடல்நலமாகி மருத்துவ மனையிலிருந்து வெளியேறும் சமயம் நான் வீட்டிற்குச் செல்லமாட்டேன். இந்தப் பாவியிடம்



கருணைவைத்த அந்த மகானிடம் முதலில் என்னை தயவுசெய்து அழைத்துச் செல்லுங்கள்' என மனமுருகி வேண்டினார். கண்ணதாசன் வேண்டியபடியே அந்த நல்ல சந்திப்பும், பாவமன்னிப்பும் நடந்தது.

மாறியது மனம், நன்றியில் ஊறியது தினம், வீறிட்டு வெளிவந்தது ஒரு கவிதை. அக்கவிதையை எடுத்துக் கொண்டு, பெரியவரை நேரில் கண்டு வணங்கி, கவிதையைச் சமர்ப்பித்தார், கண்ணதாசன். அக்கவிதை இதோ :

*பார்த்த மாத்திரத்தில் பாவத்தை அலம்புகின்ற*
*தீர்த்தப் பெருக்கு, திருவாசகத்தின் உட்கருத்து*
*கூர்த்த மதியால் மெய்ஞானக் கருத்துணர்த்தும்*
*முழுமூர்த்தம் கனிமொக்கும் இவ்வுலகைக்*
*காக்கவந்த கண்கண்ட தெய்வம்*

எம்மதத்தோரும் சம்மதத்துடன் தம்மதத் தலைவனென தொழுதேத்தும் தெய்வக் கமலக் கழல் தொழுவோம் வாரீர்! கவிதை வரிகளைக் கண்ட பெரியவர்,கண்ணதாசனைக் கனிவோடு நோக்கி, 'அனந்த கோடி அற்புத லீலா சாகித்ய மாயமானுஷாய நமோ நமஹ,அர்த்தநாரி திருவண்ணாமலை சேஷாத்ரி மகானுக்கல்லவா இது பொருந்தும்' என்று அருளாசிக் கூறி, 'அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் நிர்மலப் பொருள் ஞானசூரியனாம், மதத்தின் பெருமையை எழுது' என்று திருவாய் மலர்ந்தருள, அக்கணமே கண்ணதாசனின் மனதில் "அர்த்தமுள்ள இந்துமதம்" அழகாய் அரும்பி பலநாள் உழைப்பில் இதழ்விரித்து மணம் வீசியது

# உலைக்களத்தின் வார்ப்படம் மு.க.ஸ்டாலின்

– வழக்கறிஞர் வே.காசிநாதன்



"பேசியே ஆட்சியை பிடித்தவர்கள் தி.மு.கவினர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பிகளை பற்றி குறிப்பிடுவது உண்டு. குறிப்பாக தலைவர் கலைஞரின் மேடை பேச்சு மேடையில் வீசும் மெல்லிய பூங்காற்றாக இருக்கும். அவருக்கு பின் கலைஞரின் கற்கண்டு சொற்கொண்டு உரையாற்றும் கலையை பெற்றவர் தான் மு.க.ஸ்டாலின். மேடையில் அவர் பேசும் போது மேடைக்கு தொலைவில் நின்று கண்ணை மூடிக்கொண்டு கேட்டால் தளபதியின் குரல் அச்சு அசல் தலைவரின் குரல் போலவே இருக்கும்.



தலைவர் கலைஞரின் பேச்சு மட்டும் அல்ல அவரின் தியாகத்திற்கும் சற்றும் குறைவில்லாத தியாகத்தினை கொண்டவர் தான் தளபதி.

**1975**ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் இந்திய வரலாற்றில் ஒரு கருப்பு நாள். 1975 ஜூன் மாதம் 26ஆம் நாள் இந்திரா காந்தியால் எடுத்து வீசப்பட்ட அக்கினி ஏவுகணை நெருக்கடி நிலைப் பிரகடனம். ஏறத்தாழ 25 ஆண்டுகள் கழித்து குடியரசான இந்தியாவின் இருபத்தாறாம் நாள் மீண்டும் ஒருமுறை கருகிய நாளாகிவிட்டது.

இந்தியாவின் தனித்த தீவாக தமிழகம் இருக்கிறது என்று இந்திராவும், சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் இடம் தமிழகம் மட்டும்தான் என்று மக்களாட்சித் தலைவர்களும் மனதார ஒப்புக் கொண்ட காலம் அது.

1975 ஜூன் திங்கள் 27 ஆம் நாளில் கழகத்தின் செயற்குழு கூடி நெருக்கடி நிலைப் பிரகடனத்தைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. எந்த இந்திராவோடு கூட்டணி சேர்ந்து மைய அரசு அமைக்க உதவினாரோ, எந்த இந்திராவின் சோசலிச, நாட்டுடைமைத் திட்டங்களுக்குத் தோள் கொடுத்தாரோ, அந்த இந்திராவின், அநியாயச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார் கலைஞர்.

31 அம் நாள் இரவு மதுராந்தகத்தில் 'முரசே முழங்கு' நாடகத்தில் தலைவர் கலைஞர் வேடமேற்று நடிக்க தளபதி ஸ்டாலின் சென்றிருக்கிறார். கலைஞராக வேசம் போட்டாலே கைவிலங்குதான் முதல் பரிசு என்று யாருக்குந் தெரியும். எந்த வேடத்தை ஏற்பதாக இருந்தாரோ அதே பாத்திரத்தின் தியாகத்தை, சாதனையை, வேத னைத் தழும்புகளை ஏற்றுக் கொள்ளும் உலைக் களத்திற்குத் தளபதி அனுப்பப்பட்டார். தலைவர் கலைஞர் அவர்கள் சிறையிலிருந்த போதுதான் சிறுவனான ஸ்டாலினை அன்னை தயாளு அம்மையார் சிறைக் கம்பிகளிடையே காட்டி மகிழ்வாரம். அதைப் போலவே திருமணமாகி சில திங்களிலேயே சிறைக்கு வந்து பார்க்கும் நிலையை இல்லாளுக்கு ஏற்படுத்தியவர் தளபதி. "History repeats itself" சரித்திரம் மறுபடியும் திரும்பும் என்று சொல்வார்கள். தலைவருக்கு ஏற்படும் அனுபவம் தளபதிக்கும்ஏற்பட்டது அரசியல் ஆச்சரியம். 9வது பிளாக்காய்ந்து போன களியும், ஊசிப்போன கூழும் காலைப் பலகாரம், கழிவறைக்குக் கால்கடுக்க வரிசை, தொழுநோயாளிகளுடன் படுப்பது, கொசுவும், பூச்சிகளும், பூரானும், வாசம் கெட்ட நெடி வீசும் சுற்றுச்சூழலும் ஏழெட்டுப் பேரை உள்ளடக்கிய சிறைக் கொட்டடியும், பகல் நேரத்திலும் கம்பிகளுக்கிடையிலும் வாசம். ஆறு பேருக்கு சிறுநீர் கழிக்க மூலையில் ஒரு ஒட்டைப்பானை, பகலிலும் இரவிலும் களிக்கட்டி உணவு, தூங்க முடியாத இரவுகள். சிறைக்காவலர்களின் தாக்குதல் தொடங்கிய நாளில் அத்தனை சிறைவாசிகளுக்கும் அதிர்ச்சிகரமான சித்ரவதை தளபதிக்கு விழுந்த அடிகள் பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான் மீது விழுந்த அடிகளைப் போல அனைத்துக் கழகத் தலைவர்களும் உணர்ந்தார்கள். தீரன் சிட்டிபாபு முடிந்தமட்டும் தளபதி மீதான தாக்குதலைத் தாங்கிப் பார்த்தார். தளபதியைத் தடியாலும்கையாலும் காலாலும் தாக்கிய சிறைக் காவலர்களுக்கே அலுப்பு வந்திருக்கும்.

ஒரு காவலன் முகத்தில் எட்டி உதைத்தான், இன்னொருவன் லத்திக் கம்பால் ஸ்டாலின் தோள்பட்டையில் தாக்கினான். கன்விக்ட்

வார்டன் ஒருவன் கன்னத்தில் கையால் குத்தினான். வலது முழங்கை, தொடை கன்னம், கழுத்து என அனைத்துப் பகுதியிலும் அடித்த காயங்கள் ஆனால் மருந்தில்லை. பின்னர் தனிமைச் சிறை. நினைத்தபோதெல்லாம் நீசர்க ளின் தாக்குதல். மன உறுதியைக் குலைத்து மன்னிப்பு கோரத்தூண்டுதல் எத்தனையோ வழிகளை இதய மற்றவர்கள் கையாண்டார்கள். நெப்போலியனைத் தனிமைச்சிறையில் வைத்து வதக்கிய வெள்ளையர்கள் உணவிலும், நீரிலும் கொஞ்சம் கொஞ் சமாக விசத்தைக் கலந்தார்களாம். அதைப் போல ரத்தவெறிபிடித்த சிறைக்காவலர்கள் தளபதி ஸ்டாலினுக்குஈமொய்த்த பட்டைச் சோறு, கலங்கிப் போனா அவுன்சு கஞ்சி,கல்லும் மண்ணும் கலந்த இட்லி, வேப்பெண்ணெய் கலந்த கல்லாகிப்போன சோறு, உப்புக் கலந்த தேனீர் இதுதான் அவரது விஷே உணவு. ஆரோக்கியத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக கொடுமைப்படுத்தி இருந்த உடலையும் இம்சித்து விட்டார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக உருட்டல், மிரட்டல்கள் மனச்சிதவு ஏற்படுத்தும் கேள்விகள். எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு எதையும் தாங்கும் இதயத்தோடும் உடல் நலிவோடும் உன்னதமான தியாக வார்ப்பிடமாகத் தளபதி வெளியில் வந்தார்.

சிறையில் சிதைக்கப்பட்ட சீரழிவுகளும், சிந்தையைக் கலக்கியதியாக மறவர்களின் மரணமும், கழகத்தை அழிப்பதற்குக் காவலர்கள்காட்டிய வெறித்தனமும் சேர்ந்து புதிய படையைப் படைப்பதற்கும் புத்துணர்வு ஊட்டுவதற்கும் உறுதிகொண்ட தளபதி இளைஞர் அணியின் மாலுமியாக ஏற்றம் கண்டார். 20.7.1986இல் மதுரையில் ஜான்சிராணி பூங்காவில் தலைவர் கலைஞர் இளைஞர் அணியைத் தொடங்கி வைத்தார்.

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை ராபின்சன் பூங்காவில் தி.மு.க. உதயமானது. சரித்திரப் பின்னணி கொண்ட ஜான்சிராணி பூங்காவில் புதிய தலைமுறையின் எழுச்சி நாயகனாக, பொன்னொளி பரப்பும் கொள்கைச் சூரியனாக, புதிய தளபதி புறப்பட்ட காலம் அது. 1966இல் இளைஞர் தி.மு.கழகம் என்ற அமைப்பைக் கோபாலபுரத்தில் ஏற்படுத்தி இயக்கிய தளபதி 20 ஆண்டுகளில் அதை ஏற்றம் பெறச் செய்த வரலாறு கழகத்தின் சரித்திரத்தில் ஒரு சாசுவதமான கல்வெட்டு. கழக மாநாடுகளில் கலந்து கொண்ட இளைஞர் அணி அடலேறுகள் கழகத்திற்குப் புதிய ராணுவ மிடுக்கை ஏற்படுத்தினர். போராட்டங்கள், மறியல்கள், பொதுக் கூட்டங்களில்




இளைஞர் அணி வீறுகொண்டு கலந்து கொண்டு புதிய வரலாற்றுப் பாட்டையைச் செதுக்கியது. இயங்குதளமாக 'அன்பகம்' அமைக்கப்பட்டது அடுத்த இமாலயச் சாதனை தளபதி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகி, சென்னை மாநகரத்தின் மேயராகி, உள்ளாட்சித் துறையின் அமைச்சராகி, தமிழகத்திற்கு ஆற்றிய சேவைப் பணிகள் போல யாரும் இந்தியாவில் இப்படிப் பணியாற்றியதில்லை. கழகத்தில் இளைஞர் அணிச் செயலாளராகி, துணைபொது செயலாளராகி,பொருளாளராகி, இன்று செயல்தலைவராக இயக்கத் தொண்டர்களின் இதயத்தில் இடம்பிடித்த இளம் தலைவர் இவரைப்போல் யாருமில்லை.

அரசுப் பொறுப்பில் இருந்தபோதும், இயக்கப் பொறுப்பில் இருந்த போதும் அவர் அதிகம் பேசுவதில் நாட்டம் கொள்வதில்லை.எடுத்த செயலை முடிக்கும் சிந்தனையிலேயே அவரது எண்ணஓட்டம் முழுவதும் இருக்கும். திறமையான அலுவலர்களைத் தெரிந்தெடுத்தும் சிக்கனமான செலவுகளில் திட்டங்களை நிறைவேற்றியவர் அவர். மக்களையும், தொண்டர்களையும் சந்திக்க நாடு முழுவதும் சுற்றிக் கொண்டே இருந்த சூறாவளி அவர். அவரைச் சந்திக்கும் போதெல்லாம் 'எப்படி இருக்கீங்க' என்று கேட்டுத் தொண்டர்களைத் தோழமை கொள்வதும் போகிற போக்கில்மின்னல் கீற்றுப் போல ஒரு புன்னகையை வீசி மடக்கி விடுவதும் அவரது இயல்பான குணம். எத்தனை பார்வையாளர்கள் ஆனாலும்இருந்து பார்த்து விடுவது அவரது மக்களை மதிக்கிற மாண்பு.தோழர்களிடமும், மூத்த அரசியல் வாதிகளிடமும் அவர் பழகுவதும் பேசுவதும் மரியாதை செலுத்துவதும் பிறப்பிலிருந்தே வந்த பெருங்குணம்.கொள்கைத் தங்கமாக, குணக்குன்றாக, தியாக மறவனாக, திகழும் தளபதி ஆல்போல் தழைத்து, அருகு போல் வேரோடி, மூங்கில் சுற்றத்தோடு முதிராமல் வாழ்ந்திருக்க நாமும் வாழ்த்துகிறோம்...

அடுத்த இதழில் "கனல் கக்கும் காஷ்மீர்..."

வழக்கறிஞர் வே.காசிநாதன் எழுதும் கட்டுரை



# தானத்தில் சிறந்தது அன்னதானம்!

மனிதம் மறந்து போன மனிதர்கள் வாழும் இந்தச் சமுதாயத்தில் எவ்வளவு கஷ் டங்கள் வந்தபோதும் தானம், தர்மம் என்பதைத் தனது இரு கண்களாகப் பாவித்து,

இன்று வரை பிறர் கஷ்டங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் ஒரு அற்புத மனிதர்; அவர் தான் சென்னை வடபழனியில் உள்ள கௌதம் ஜுவெல்லரி என்ற தங்கநகைக் கடையை நடத்தி வரும் திரு. கௌதம் அவர்கள்.

கடந்து வந்த பாதையை அவர் நம்மிடையே கூறியதைப் பார்ப்போமா?

எனது பெயர் கௌதம். ராஜஸ்தான் மாநிலத்தில், ஜோத்பூர் மாவட்டத்தில் பில்லாரா என்ற ஊரில் பிறந்தேன். கடந்த 35 வருடங்களுக்கு முன்பு சென்னை வந்தோம். அன்று முதல் இன்று வரை வடபழனியில் தான் வசித்து வருகின்றோம்.

முருகப் பெருமானின் அருளால், சென்னை வந்த புதிதில் பாத் திரக் கடை வைத்திருந் தேன்.

அப்படியே வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. எனக்குப் பாத்திர வியாபாரத்தில் பெரிதாக வருமானம் இல்லை. அது மட்டுமின்றி பல ஏமாற்றங்கள். மனித மனங்களைப் படிக்கத் தெரியாமல் நிறையப் பணத்தை இழந்துள்ளேன்.

ஏழு வருடங்கள் எழுந்திருக்க முடியாத அளவுக்குக் கஷ்டங்கள். சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டப் பட்டுள்ளேன். எனது குடும்பத்தில் நான், எனது மனைவி, 3 பெண் குழந்தைகள், 3 ஆண் குழந்தைகள் எனப் பெரிய குடும்பம்.

குடும்பம் நடத்தவே போதிய வருமானம் இல்லாமல் மிகுந்த மன அழுத்தத்தில் இருந்த நாட்கள் பல. அதன்பிறகு முருகனின் ஆசிர்வாதத்தால் சின்னதாக நகைக்கடை ஆரம்பித்தேன். அதுதான் கௌதம் ஜுவெல்லரி.

வடபழனி மக்கள் மத்தியில் கௌதம் ஜுவெல்லரிக்கென்று கைராசி, நம்பிக்கை, நாணயம் என்று நல்ல பெயர் உள்ளது.

எங்களது கடையில் தங்கநகைகள் மட்டுமின்றி வெள்ளி, கவரிங் நகைகளும் உள்ளன. எங்களது சிறப்பு என்னவென்றால் புதுநகை வாங்கும் போது, பாதிப்பணத்தைக் கட்டி விட்டு மீதிப்பணத்திற்கு பழைய நகையை அடமானம் வைத்துத் திருப்பும் வசதியைத் தந்து இருக்கின்றேன். அதனால் எங்களது கடைக்கு என்றே தனி வாடிக்கையாளர்கள் உண்டு என்பதை மிகவும் பெருமையாகக் கருதுகின்றேன்.

சென்னை வந்ததில் இருந்து இன்று வரை தானம், தருமம் என்பதை எந்தக் கஷ்டங்கள் வந்த போதும் கைவிடவில்லை. அதனால் தான், நான் கஷ்டப்பட்ட 7 வருடங்களில் அந்த வடபழனி முருகன் என்னைக்



கடைக்கு முன் தண்ணீர் கேன் வைத்து 24 மணி நேரமும் மக்களின் தாகத்தைத் தணிக்கின்றேன்.

வடபழனி முருகன் கோவிலில் எந்த விழா நடந்தாலும் பக்தர்களுக்கு நீர்மோர் அல்லது தண்ணீர் வழங்குகின்றேன்.

சிவன் கோவில், முருகன் கோவில் தேரின் போதும் பக்தர்களின் தாகம் தீர்க்கின்றேன்.

மகாவீர் ஜயந்தியின் போது நான்கு விதமான உணவை அன்னதானமாக வழங்குகின்றேன்.

ஏழை மாணவர்கள் இருவரை ஆண்டு தோறும் தேர்ந்தெடுத்து அவர்களின் பள்ளி அல்லது கல்லூரி ஃபீஸ் கட்டி வருகின்றேன்.

கோடைக்காலத்தில் பொதுமக்கள் இளைப்பாற பந்தல் போடுவதுடன், காலில் செருப்பு இல்லாதவர்களுக்கு செருப்பு வழங்கி வருகின்றேன்.

விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு விடுதிக்கட்டணத்திற்கான காசோலை வழங்குகின்றேன்.

ஜெயின் சமூகம் சார்பில் ஒவ்வொரு மாதமும் 2 வது ஞாயிற்றுக் கிழமை கண் சிகிச்சை முகாம் நடத்தி வருகின்றோம்.

என்னைப் பொறுத்தவரை எதிர்காலம் பற்றிய சிந்தனை இல்லை. இருக்கும்வரை நல்லது செய்வோம். போகும் போது எதையும் எடுத்துச் செல்லப் போவதில்லை. என்னை பார்த்து



எனது சமூகத்தினர் சிலர் உதவி வருகின்றனர். இதுபோல் மற்றவர்களும் உதவ வேண்டும் என்றார் கௌதம். அவரது தான தருமங்கள் தொடரமித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துவிட்டு வந்தோம்.

கைவிடவில்லை. இன்று வரை என்னால் முடிந்த பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றேன்.

எனக்குச் சொந்த வீடும் கிடையாது. சொந்தக் கடையும் கிடையாது. இருந்தும் எனது 3 மகள்களையும் நல்ல முறையில் திருமணம் செய்து தந்துள்ளேன். எனது மூத்த மகன் என்னுடன் கடையைக் கவனித்து வருகின்றார். இளைய மகன்கள் இருவரும் படித்து வருகின் றனர்.

நான் பெரிய கோடீஸ் வரன் அல்ல; ஆனாலும் எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் உதவி வருகின் றேன்.

உதவும் குணம் என்னு டன் பிறந்தது. எனது மூச்சு உள்ள வரை ஆண்டவனின் அருளால் இந்த உதவிகள் தொடரும்.

நீங்கள் கேட்டதன் பேரில் சில உதவிகளை மட்டும் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

முதலில் உதவி என்று ஆரம்பித்தது ஐயப்ப பூஜையின் போது 1000 பேர் விளக்கேற்ற எண்ணெய் டின் மற்றும் பிரசா தமாக லட்டு, பூந்தி வழங்கினேன்.


K.V.ஈஸ்வரி.

முதன்மை செய்தியாளர்:

மித்ரா டைம்ஸ்

9087628705

# ECO SYSTEM (Ecological System)

Eco System is formed by the interaction between Living Things and Non Living Things.An ecosystem is all the plants and animals that live in a particular area together with the complex relationship that exists between them and their environment

In an ecosystem, each organism has its role and purpose. Disturbing the balance of an ecosystem can be disastrous for all the living things relying on it. Each ecosystem differ in size and components, but the important thing to remember is that no matter the size, it's a symbiotic community.

When an ecosystem is stable and healthy, we call it Sustainable. This means that it is capable of sustaining itself and reproducing. Sustainable ecosystems have biodiversity. There's a variety of species and organisms living there and contributing.


Due to ocean acidification, water pollution and illegal fishing our marine life is slowly vanishing. Deforestation is caused by Illegal logging and human need and progress.

Many species have become extinct due to this,Habitat loss is endangering our animal species Humans destroy ecosystems. Our lifestyle creates pollution and we overuse our natural resources. Today, we are using the resources of 1 and ½ planet Earths, even though we only have one. We build roads, hunt animals, cut down trees destroying forests and just litter the planet like crazy. We waste resources that are not infinite and will soon run out, if we continue our practice. Our Earth is also considered as an ecosystem on a much larger scale. When we introduce external factors such as too much carbon dioxide or methane, it destroys the balance of the ecosystem which in turn affects those who live in it. The result is global warming, water shortage, extinction of species, etc. These impacts every living thing on the planet, which includes us. The impact of ecosystem destruction will be felt by everything eventually.

Our natural ecosystems are finding it hard to cope with the different pressures and are unable to adjust. If we continue depleting resources and destroying our environment, soon it will be too late for them to recover, even with our help.

The impact of ecosystem destruction are the following: Increased flooding due to the erosion of soil and lack of trees Rising of the sea levels due to the melting of the glaciers, caused by Global Warming

Disruption of the food chain when the apex predators become extinct Water shortage - we only have a finite supply of fresh drinking water Food shortage as the lands become barren and the oceans become fishlessLoss of biodiversity as whole species of living things disappear due to deforestation Pollution will eventually become unmanageable and affect our health. Rising temperatures may be too much for all living things on the planet




**How eco systems are changed?**

**Due to**

**1 Draught**

**2.Fire**

**3.Diseses**

**4.Overpopulation**

**How can we prevent the changes in eco system?**

**1.Use resources Wisely**

**2.Clean up litter**

**3.Enforcing laws to avoid pollution**

**4.Keep rivers and lakes clean**

**To be Continued...**

**G.Rammohan -**



# தயக்கம் வெற்றியை தடுக்கும்

எட்வின் சி ஆல்ட்ரின்... இவர் தான் நிலவுக்கு சென்ற அப்பல்லோ விண்கலத்தின் பைலட்... அதாவது விமானி...

ஆல்ட்ரின் அமெரிக்காவின் விமானப் படையில் பணிபுரிந்தவர். மேலும் விண் நடை அனுபவம் உள்ளவர். அதனால் அவர் பைலட்டாக நியமிக்கப்பட்டார்... நீல் ஆம்ஸ்ட்ராங்க் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். மிகுந்த தைரியசாலி என்பதால்தான் இந்த பயணத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்...

அவர் கோபைலட் அதாவது இணை விமானி... இவர்கள் சென்ற அப்பல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும் நாசாவிலிருந்து, "பைலட் பர்ஸ்ட்"... என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், ஆல்ட்ரினுக்கோ மனதில் சின்ன தயக்கம். இடது காலை எடுத்து வைப்பதா?... வலது காலை எடுத்து வைப்பதா? என்றல்ல... "'நிலவில் முதன் முதலில்கால் எடுத்து வைக்கிறோம்.

புவியீர்ப்பு விசையற்ற இடத்தில் இருக்கிறோம்கால் வைக்கும் இடம் எப்படி இருக்கும் என்று தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்துவிட்டால், எரி மணலாக இருந்து காலை சுட்டுவிட்டால்'"... தயக்கத்தில் மணிக்கணக்காக தாமதிக்கவில்லை... சில நொடிகள்தான் தாமதித்திருப்பார்... அதற்குள் நாசாவில் இருந்து இரண்டாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது, "கோபைலட் நெக்ஸ்ட்..."நீல் ஆம்ஸ்ட்ராங் கட்டளை வந்த அடுத்த நொடி காலடி எடுத்துவைத்தார்... உலக வரலாறு ஆனார்...

உலக வரலாறு, ஒரு நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது... திறமையும் தகுதியும் இருந்தும்கூட தயக்கத்தின் காரணமாக தாமதித்ததால் இன்று ஆல்ட்ரினை யாருக்கும் தெரியவில்லை.

## MITRA TIMES

# Quizz...

What is Elvis Presley s middle name?

Who is the singer of The Counting Crows?

Who was the Queen of Soul?

What is the lowest male voice?

Which famous group was once known as The Quarrymen?

What was the name of AC / DC s lead singer who died in 1980?

What is Madonna s full name

What is the name of the Irish singer who won the Eurovision Song Contest twice?

What is the noisy invention of Louis Glass in 1890 called?

Who is the frontman of The Prodigy?

Who is the drummer of Metallica?

Which group did have a hit with the Macarena?


Who did win the most Grammy Awards in the 80?

How many strings has a mandolin got?

What is the biggest hit of Bing Crosby?

What is the surname of the singer Rihanna?

**Send the Answers And Win One year Subcription**




# சிறு நீர் அடைக்கிறதா?

சமீபத்தில் ஒரு புகழ்பெற்ற அலோபதி மருத்துவரை ஒரு மருத்துவக் கட்டுரை விஷயமாக சந்தித்தேன். வயது 70களில் இருப்பவர்..

அவர் ஒரு ஈஎன்டி ஸ்பெஷலிஸ்டும் கூட! தனக்கு நேர்ந்த ஒரு பிரச்னை பற்றி அவர் பகிர்ந்து கொண்ட விஷயம் மிக ஆச்சர்யமாக இருந்தது..

அன்று காலை எழுந்தவுடன் அவருக்கு ஒரு பிரச்னை. சிறுநீர் போக வேண்டும் போல அவரின் அடி வயிறு முட்டிக் கொண்டு இருக்கிறது. ஆனால், போய் உட்கார்ந்தால் வரவில்லை. இந்த வயதில் இதுபோல் சிலருக்கு வராமல் கொஞ்ச நேரம் போக்கு காட்டுவது சகஜம், பிறகு முயற்சித்தால் வந்து விடும் என்பதால், சற்று நேரம் கழித்து முயற்சித்து பார்த்திருக்கிறார். அப்போதும் வரவில்லை. தொடர்ந்து முயற்சித்தும் சிறுநீர் வரவில்லை என்றதும் தான், ஏதோ பிரச்னை என்று புரிந்தது.

டாக்டராக இருந்தாலும், தசையும் ரத்தமும் கொண்ட மனிதர் தானே அவரும்! அடிவயிறு கனத்துப் போய், உட்காரவும் முடியாமல், நிற்கவும் முடியாமல் படு அவஸ்தையாக, ஒருவித பயத்துடன் இருந்த அந்த நிலையில், உடனே தனக்குப் பழக்கமான ஒரு சிறுநீரக இயல்துறை மருத்துவரை தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்.

"நான் இப்போது புறநகர்ப் பகுதியில் ஒரு மருத்துவமனையில் இருக்கிறேன். பத்தரை மணி போல உங்கள் வீடு இருக்கும் ஏரியா அருகிலுள்ள மருத்துவமனைக்கு வந்துவிடுவேன். அதுவரை இன்னும் ஒன்றரை மணி நேரம் தாங்குவீர்களா?'' என்று கேட்டிருக்கிறார் அந்த மருத்துவர்.

"பொறுத்துப் பார்க்கிறேன்!'' என்று அவர் சொன்ன அந்த நேரம் பார்த்து இன்னொரு போன்.

அது, அவரின் ஊர்க்காரரான (சுசீந்திரம் பக்கம்) இன்னொரு அலோபதி மருத்துவரிடமிருந்து வந்திருந்தது..

போன் பேசக்கூட முடியாதபடி, தன்னை பெரும் கஷ்டத்துக் குள்ளாக்கும் தன் பிரச்னையைப் பற்றி தன் சிறுவயது மருத்துவ தோழரிடம் பகிர்ந்து கொண்டார் ஈஎன்டி மருத்துவர்.

''ஓ.. சிறுநீர் சேர்ந்திருந்தும் வெளிவர வில்லையா கவலைப்படாதே.. சரி, நான் சொல்வது போல செய், வந்து விடும்!" என்றவர், அதற்கான இன்ஸ்ட்ரக்ஷன்களைத் தர ஆரம்பித்து விட்டார்.

"எழுந்து நின்று நன்றாகக் குதி... குதிக்கும் போது உன் ரெண்டு கைகளை அப்படியே மேலேயிருக்கும் மாம்பழத்தைப் பறிப்பது போல ஆக்சன் செய் இப்படி ஒரு பதினஞ்சு இருபது முறை செய்!'' என்று சொல்லியிருக்கிறார்.

என்னது! அடிவயிறு சிறுநீரால் தளும்பிக் கொண்டிருக்கும் நிலையில் மேலே எழும்பிக் குதிப்பதா? என்று திகைத்தாலும், நண்பர் கூறினாரே என குதிக்க ஆரம்பித்தார். நாலைந்து முறைகூட குதிக்கவில்லை, அடைபட்டு இருந்த சிறுநீர் வெளிவர ஆரம்பித்து விட்டது. அப்படியொரு மகிழ்ச்சி அந்த ஈஎன்டி மருத்துவருக்கு!!

"எத்தனை எளிமையாக என் பிரச்னையை தீர்த்தாய் நண்பா!' என கொண்டாடி விட்டார்.

அவர் சொன்னார், "இந்தப் பிரச்னைக்குத் தான் மருத்துவமனையில் சேர்த்து, பிளாடரில், கதீட்டர் டியூப் எல்லாம் சொருகி, ஒரு புரசீஜர் செஞ்சு அதுக்கு ரூ. 50,000 போல சார்ஜ் செஞ்சிருப்போம்.

அதுக்கும் மேல ஆஸ்பத்திரி செலவுகள், ஆன்டிபயாடிக் மருந்துகள், ஊசிகள், முக்கியமா அலைச்சல்கள், மன உளைச்சல்கள் எல்லாம் சேர்ந்து செலவாகும்!

நண்பர் சொன்ன ஒரு சின்ன குதிப்பதில் இத்தனை செலவுகள் எனக்கு மிச்சமாச்சு!'' என்றார் பெருமிதத்துடன.

# முரண்பாடு

அத்தியாவசிய தேவையான அரிசியின் விலை கிலோ 40 லிருந்து 50 ரூபாய். ஆனால் சிம்கார்டு இலவசமாகக் கிடைக்கிறது..!!

பொது வினியோகத்தில் விற்கப்படும் அரிசியின் விலை கிலோ ஒரு ரூபாய். ஆனால் பொதுக்கழிப்பறையின் கட்டணம் மூன்று ரூபாய்..!!வங்கிகளில் வாகனக் கடன்களுக்கான வட்டி 5சதவிகிதம். ஆனால் கல்விக்கடனுக்கான வட்டி 12சதவிகிதம்..!!**Pizza** வீட்டிற்கு வந்து சேரும் வேகத்தில், பாதியளவு வேகத்தில் கூட அதாவது பாதி நேரத்தில் கூட ஆம்புலன்சும், தீயணைப்பு வாகனங்களும் வந்து சேர்வதில்லை..!!

ஒரு கிரிகெட் குழுவையே கோடிக் கணக்கான பணத்தைக்கொடுத்து விலைக்கு வாங்கக்கூடியசெல்வந்தர்கள் இருக்கிறார்கள். அதே பணத்தில்பத்தில் ஒரு பங்கைக்கூட நாட்டு நலப்பணிகளுக்குச்செலவு செய்யக்கூடிய செல்வந்தர்கள், மட்டும் இல்லை..!!அணியும் ஆடைகளும், காலணிகளும் குளிரூட்டப்பட்டகடைகளில் விற்கப்படுகின்றன. ஆனால் உண்ணும்காய்கறிகளும், பழங்களும் நடைபாதை கடைகளில் விற்கப்படுகின்றன..!!

குடிக்கும் **Lemon Juice,Orange juice...etc**இவையெல்லாம் செயற்கையானரசாயனப்பொருட்களால் தயாரிக்கப்படுகின்றன. பாத்திரம் கழுவ உதவும் நீர்க் கலவைஇயற்கையான எழுமிச்சையில் (லெமனில்) தயாரிக்கப்படுவதாக சொல்லப்படுகிறது..!!

மொத்தமாகப் பள்ளிகளையும், கல்லூரிகளையும்நடத்த வேண்டிய அரசு, வீதிக்கு வீதி சாராயம்விற்றுக்கொண்டிருக்கிறது. சாராயம் விற்றுகொண்டிருந்த பலர் இன்று கல்லூரிகளை வைத்துவியாபாரம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

கோதுமைக்கு வரி என்பது இல்லை. ஏனெனில் கோதுமை விளை பொருள் என்பதால். கோதுமையைமாவாகத் திரித்தால் வரியுண்டு. கோதுமை மாவை சப்பாத்தியாக செய்து விற்றால் வரியில்லை...அதேமாவை பிஸ்கட், கேக், பிரெட்டாகச் செய்து விற்றால் வரி உண்டு..!!

விமானத்தை மிகச் சாதாரணமாகவும்.. வண்ணத்துப் பூச்சியை ஆச்சர்யமாகவும் பார்க்கின்றனர், நகரத்துப் பிள்ளைகள்.!

வாழ்க்கையில் உயரச் செல்வதற்கான வாய்ப்பு, சிலருக்கு படிக்கட்டாகவும், சிலருக்கு எஸ்கலேட்டரா கவும், சிலருக்கு லிஃப்ட்டா கவும் அமைகிறது..

பியூட்டி பார்லரை ஏளனச் சிரிப்போடு கடந்து செல்லும் ஏழைப்பெண் தான் கொள்ளை அழகு.!

தோற்றுப்போய் வீடு திரும்புகையில், தலை வாரி மடி சாய்க்க ஒருவர் இருந் தால் போதும், நமதுவாழ்க் கையை ஜெயித்துவிடலாம்.

முதியோர் இல்லத் திற்கு பணம் கொடுங்கள், பொருள் கொடுங்கள், உணவு கொடுங்கள், உடை கொடுங்கள் .. ஆனா உங்க பெற்றோரை மட்டும் கொடுத்துடாதீங்க..

20 வயசு வரைக்கும்தான் வேளா வேளைக்கு சோறு.. அதுக்கு மேல வேலைக்கு போனால் தான் சோறு..

டாக்டரை மறந்து விட்டு நர்சுகளை ஞாபகம் வைத்து இருக்கும் விசித்திரமான மாய உலகம் இது.!

ரெண்டையும் பொண்ணுங்களா பெத்தவங்கள விட, ரெண்டையும் பசங்களா பெத்தவங்கதான் பெரும்பாலும் முதியோர் இல்லத்துல இருக்காங்க.!

கடவுள் சிற்பத்தை 'கல்' என ஒத்துக்கொள்பவர்கள், பணத்தை 'காகிதம்' என ஒத்துக்கொள்வதில்லை.

அன்று சங்கம் வைத்து தமிழ் வளர்த்தார்கள்.. இன்று சங்கம் வைத்து சாதி வளர்க்கிறார்கள்...

கடவுளாக ஒரு மூலை யில் அமர்ந்திருப்பதற்கு கல்லாயிருந்தால் போதும்.. மனிதனாக உட்கார்ந்து வாழத்தான் அதிக விவேகம் வேண்டியிருக்கிறது.!

மழையை நிறுத்த தமிழர் கள் இரண்டு யுக்திகளைக் கையாளுகிறார்கள். ஒன்று, ஃபேஸ்புக்கில் கவிதை எழுதுகிறார்கள்.. மற்றொன்று ஸ்கூலுக்கு லீவு விடுகிறார்கள்..

மழைக்காக விடப்பட்ட விடுமுறையில் ஒருபோதும் மழை பெய்வது இல்லை..

அவை குழந்தைகள் மீதான கடவுளின் மனிதாபிமானம்..

ஷாப்பிங் மால்களில் பேரம் பேச வக்கில்லாத நாம்தான், சாலை ஓரத்து ஏழை வியாபாரியிடம் வெட்கமே இல்லாமல் பேரம் பேசுகிறோம்.

ஆளே இல்லாத செவ்வாய் கிரகத்துக்கு ராக்கெட் விடுறீங்க சரிதான்..

ஆள் இருக்கிற எங்க ஊருக்கு எப்படா பஸ் விடுவீங்க? நண்பர்களே ... ! இது போன்ற விழிப்புணர்வு கருத்துக்களை பிறருக்கு பகிர்ந்து கொள்வதில் தயக்கம் வேண்டாம்



# 24 மணிநேரம் டாஸ்மாக்

# கண்டு கொள்ளாத அரசு!




அருகாமையில் குமரன் மருத்துவமனை கங்கா பவுன்டேஷன், கே.ஆர்.எம். என்கிளேவ் போன்ற குடியிருப்புகள் இருப்பதால் பொதுமக்களின் நடமாட்டம் அதிகம் உள்ள இடத்தில் டாஸ்மாக் அமைந்திருப்பதை காவல் துறையோ அரசு உயர்அதிகாரிகளோ இது வரை கண்டுகொள்ளாமல் இருப்பது அவர்களும் இதற்கு உடந்தையோ என்ற கேள்வி எழந்துஉள்ளது.

அரசு மதுக்கடைகள் பகல் 12 மணியிலிருந்து இரவு 10 மணி வரை மட்டுமே இயக்க வேண் டும் என்பது சட்டம், ஆனால் சென்னை கொளத்தூர் ரெட்டை ஏரி சிக்னலுக்கு அருகாமையில் உள்ள டாஸ்மாக் 24 மணிநேரம் இயங் குகிறது. அரசு அனுமதி எண் இல்லாததால் பெயர் பலகை உடன் இயக்குவதால் அரசு அனுமதி பெற்றுள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது. 24 மணிநேர ஆஸ்பத்திரி அருகில் 24 மணிநேர டாஸ்மாக் அமைந்துள்ளதா என சிரமத்திற்கு ஆளாகும் பொதுமக்கள், பெண்கள், கோபத்துடன் கேட்கிறார்கள். அரசு நடவடிக்கை எடுக்குமா?



# 10 செகண்ட் கதைகள்

## ஸீட்

தன் மகன், அரசுக் கல்லூரியில் இலவச ஸீட் வாங்குவதற்காக, தனியார் பள்ளியில் அதிகப் பணம் கொடுத்து சேர்த்தார் தந்தை

## தமிழன்டா

சென்னையைவிட்டு அமெரிக்கா சென்ற நண்பன் சந்தோஷமாகச் சொன்னான்..."அங்கே நிறைய தமிழ் ஆளுங்க இருக்காங்கடா!'

## திருட்டு

'பென்சில் திருடினதுக்கு மிஸ் அடிச்சிட்டாங்க' எனக் கேவிக்கேவி அழுத மகளிடம், 'திருடுறது தப்பு...'பென்சில் வேணும்'னு அப்பாகிட்ட கேட்டிருந்தா ஆபீஸில் இருந்து கொண்டு வந்திருப்பேன்ல!' என்றார் அப்பா.

## பணம்

பள்ளிக் கட்டணம் கட்டாததால், மாணவியை வகுப்பறை வாசலில் நிற்கவைத்தாள்.... இரண்டு மாதமாக சம்பளம் வாங்காத ஆசிரியை!

## பழ[ங்]கதை

"தம்பிதானே....விட்டுக்கொடுப்பா" என மகனிடம் செல்பேசியில் சொல்லிக் கொண்டிருந்தார் தன் சகோதரன் மீது தகராறு என காவல்நிலையத்தில் நின்றிருந்த தந்தை!

## அக்கறை

கோயில் திருவிழாவில் தன் குழந்தையைத் தவறவிட்டு 'காணவில்லை' என அழுதபடி தேடிக்கொண்டிருந்தவளின் இடது கையில் பத்திரமாக இருந்தது கைபேசி!

## விதி

'துப்பாக்கியில் சைலன்ஸர் இருந்தும் எப்படி மாட்டிக்கிட்ட?' என்றான் சக கைதி. 'செத்தவன் கத்திட்டானே!' என்று சோகமாகச் சொன்னான் கொலைகாரன்!

---

# காமராஜரிடம் கண்கலங்கிய சோ

சோவின் நாடகம் தடைசெய்யபடுகின்றது, கோர்ட்டுக்கு செல்கின்றார் சோ ஆட்சேபகரமான காட்சிகள் என சில காட்சிகளை சொல்லி தடை செய்ய சொல்கின்றார் நீதிபதிசட்டம் இதுவானால் அதை நீக்கி நாடகம் நடத்துவேன் ஆனால் நீதிமன்றம் தடை செய்த காட்சிகள் எது என எழுதிகொண்டே இருப்பேன் அப்பொழுது நீங்கள் தடை செய்ய நினைத்த விஷயம் உலகெல்லாம் தெரியும்அதற்கு மேல் நீதிபதி ஒன்றும் செல்லவில்லை, நாடகம் நடந்தது காமராஜர் வந்திருந்தார் நீதிமன்றம் செல்லும் நிலைவரை வந்தாயிற்று என்றார் சோ நீ சட்டத்தை மீறி ஏதும் எழுதியிருப்ப, அதான் சிக்கலாயிருக்கும் என்றார் காமராஜர் இப்போ லைசன்ஸ் கிடைச்சிட்டே என்றார் சோ லைசென்ஸ் கிடைச்சிட்டா உன் இஷ்டத்துக்கு கார் ஓட்டுவியா? அக்கம் பக்கம் பாக்க மாட்டியா என்கின்றார் காமராஜர் லைசென்ஸ் கொடுக்கிறதே கார் ஓட்டத்தானே, நான் யாருக்கும் ஆபத்தில்லாமல் ஓட்டும்வரை என்ன சிக்க என்னமும் பண்ணு, நாடகத்தை தொடங்கு என்றார் காமராஜர் இப்படியாக காமராஜருக்கும் அவருக்கும் நட்பு இருந்திருக்கின்றது எல்லா இடங்களிலும் சிரித்து கொண்டிருக்கும் சோ அழுத காட்சி வரலாற்றில் ஒன்றே ஒன்றுதான் அது காமராஜர் பணக்காரர் கை கூலி, டெல்லியில் இருந்து வரும் அரசியல்வாதி எல்லாம் காங்கிரஸ் பணக்காரர் வீடுகளில்தான் காமராஜரால் தங்க வைக்கபடுகின்றனர் என எதிர்கட்சிகள் சர்ச்சை கிளப்பிய நேரம் காமராஜரை காண சென்ற சோவிடம் இதனை குறித்து சொல்லிகொண்டே சட்டென்று கேட்டார் காமராஜர் நீ இவ்வளவு நாளும் இங்க வந்து போற, என்னைக்காவது உன்னை என்கூட சாப்பிட சொல்லியிருக்கேனா? இல்லை என தலையாட்டுகின்றார் சோ ஒரு காபியாது கொடுத்திருக்கேனா? நெற்றியினை சுருக்கி இல்லை என்கின்றார் சோ இங்கு அவ்வளவுதான் வசதிண்ணே, நானும் என் சமையல்காரனும் சாப்பிடுற அளவுதான் வசதிண்ணேன், இது வாடகை வீடுண்ணே டெல்லியில் இருந்து திடீர்னு வாரவங்களுக்கு இங்க கொடுக்க ஒண்ணுமில்லை அதான் வசதி உள்ளவங்க வீட்டுக்கு அனுப்புறேன், இது குத்தமா ஒரு ஒண்டிகட்டை வீட்டுல என்ன இருக்கும்ணு தெரியாம அவனுக இஷ்டத்துக்கு எழுதுறானுக" சொல்லிவிட்டு கலங்குகின்றார் காமராஜர். சோ ராமசாமி அழுத இடம் இதுதான், இது ஒன்றுதான் தமிழக மக்கள் என்றென்றும் மறக்க முடியாத....மறக்க கூடாத தலைவர் நமது கர்ம வீரர்...



## கபாலிகான் நியூஸ்

அம்மா பைக் ஓட்டி வந்த ஒரு பெண்ணின் பின்னாடி உட்கார்ந்து வந்து அலுவலகம் வந்து இறங்கினார் கபாலிகான்,

உள்ளே நுழையும் போதே ச..ரி.க..ம.ப..த.நி.. ம.நீ.ம.. ம.நீ.ம.. ம.நீ.ம.. என்று பாடிக்கொண்டு வந்தார்.

**என்ன பாட்டு இது?**

என்றோம் மீண்டும் ம.நீ.ம.. என்றவர் மக்கள் நீதி "மய்யம்" என்ற பெயரில் கமல் அரம்பித்துள்ளாரே கவனிக்கவில்லையா?

**மக்கள் நல்வாழ்வு மையம் ஏற்கனவே அரசு சார்பில் ஒவ்வொரு நகரிலும் இயங்குகிறதே?**

அலோ! இது கட்சிங்க.. நீங்க செல்லுறது அரசு ஆஸ்பத்திரி

ஓஹோ!

கமல் கட்சி ஆரம்பிச்சு உறுப்பினர்களை சேர்த்துக்கிட்டு இருக்கிறாரே?

**அப்ப ரஜினி?**

ஏற்கனவே உறுப்பினர்களை சேர்த்துவரும் ரஜினி கட்சி பெயரை இன்னும் அறிவிக்கவில்லை இந்த விஷயத்தில் கமலை ரஜினியும் ரஜினியை கமலும் முந்தி பிந்தி வருகிறார்கள்.

ஆனால் ரெண்டு பேரும் ஒரே புள்ளியில் இனைவோம் என்கிறாரே ரஜினி?

**அது என்ன புள்ளி?**

அது தான் மோடி என்கிற பெரும் புள்ளி.

**கமல் மோடி பேச்சை கேட்பாரா?**

ஏற்கனவே தூய்மை இந்தியா திட்டத்தின் தூதுவராக இருந்தவர் தான் கமல் இதுவரை அவர் மோடியை விமர்சித்ததாக எந்த செய்தியும் இல்லை.

**ரஜினியும் எதிர்க்கவில்லையே?**

அந்த விஷயத்தில் மட்டும் ரஜினி தெளிவாக அ.தி.மு.க அரசை எதிர்த்து 234 தொகுதிகளிலும் போட்டியிடப்போவதாக சொல்லியிருக்கிறாரே.

**மோடி சொல்லித்தான் நான் இணைந்தேன் என்று ஓ.பி.எஸ். சொல்லுகிறாரே?**

அதைத் தான் சொல்ல வந்தேன் O.P.S, E.P.S கமல் ரஜினி, எல்லோருக்கும் G.P.S மோடிதானே?

**என்ன டி.ஆர். மாதிரி ரைமிங்கா பேச ஆரம் பிச்சிட்டிங்க**

டி.ஆர்.ன்னா சும்மா வா இப்ப அரசியலுக்கு வர நடிகர்களுக்கெல்லாம் அவர் தானே முன்னோடி

**அதுக்கு என்ன இப்போ?**

மீண்டும் வருவேன் அரசியலுக்கு. எல்லாரையும் தூக்கிபோட்டு அடிப்பேன் ஒரு கலக்கு கலக்கு இனி வருவேன் தீவிரமா எவனையும் ஜெயிப்பேன் படு வீரமான்னு வசனம் பேச ஆரம்பிச்சிட்டாரு டி.ஆர்.

**சரியாத்தானே பேசறாரு டி.ஆர்? ஆனால் சீமான் மாத்தி மாத்தி பேசுறாரே?**

ஆமாம் கடவுள்





# O.P.S E.P.S கமல் ரஜினி எல்லோருக்கும் மோடி G.P.S

இல்லை போனவருஷம் பெரியார் பிறந்தநாள் கூட்டத்தில் பேசுனவர் இந்த வருஷம் முருகன் பக்தர் ஆயிட்டாரே .

**அ.தி.மு.க. வில் மீண்டும் பிளவு வரும் என்கிறார் களே?**

மோடி பஞ்சாயத்து பண்ணியும் நடக்காது என்கிறார்கள் எல்லாமே தினகரனின் ஆதரவு சார்பாக 18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம், ஓ.பி.எஸ். ஆதரவு 11 எம்.எல்.ஏக்கள் வழக்கு தீர்ப்புக்கு பிறகுதான் தெரியும்.

**எப்படி?**

ஒரு வேளை தீர்ப்பு தினகரனுக்கு சாதகமாக வந்தால் ஓ.பி.எஸ். ஐ கழட்டிவிட்டு இ.பி.எஸ். தினகரனுடன் சேர்ந்து ஆட்சியை தொடர வாய்ப்பு இருக்கிறதாம்.

**அப்படியும் நடக்குமா?**

கோடி இருந்தால் எப்படியும் நடக்கும் அதனால் தான் ஓ.பி.எஸ். திரும்பத் திரும்ப, மோடி தனக்கு பின்னால் இருக்கிறார் என்பதை காட்டிக்கொள்ள படாத பாடு படுகிறார்.

**ஆனால் மோடி ரியாக்ஷன்?**

பைக் மானியத் திட்டம் துவக்க விழாவிற்கு வந்த பிரதமரை விமான நிலையத்தில் வரவேற்கும் போது புரோட்டாகால் படி முதலமைச்சர் தான் வரவேற்க்க வேண்டும் ஆனால் ஓ.பி.எஸ் வரவேற்ற பின்பு தான் முதலமைச்சர் வரவேற்கிறார் இது அரசியல் பார்வையாளர் மத்தியில் ஆச்சர்யத்தை ஏற்படுத்தி உள்ளது.

**தி.மு.கவினர் உற்சாகமாக இருக்கிறார்களே?**

வருகின்ற 24, 25 ஈரோட்டில் மாநில மாநாடு நடப்பதற்கான ஏற்பாடுகளை தடபுடலாக செய்து வருகிறார்கள் தி.மு.கவினர். ஆனால் கள ஆய்வுக்கு பின் கட்சியில் களையெடுப்பும், புதிய நாத்து நடவும் இருக்கின்றது என்று தொண்டர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்படுகிறது.

வாம்மா என்று தனது சிஷ்யை அழைத்து கொண்டு அம்மா பைக்கில் ஏறிச் சென்றார் கபாலி கான்

# வெற்றி வேண்டுமா?

தொடர்2

**கவிஞர். மணிபாரதி**

எந்தவொரு ஊருக்கும் செல்வதற்கு பாதைகள் பல உண்டுஒரு பாதை, கரடு முரடானதாக இருக்கலாம். இன்னொரு பாதை, தெளிவான நீரோடை போலக் காட்சியளிக்கலாம். ஆனால் சற்றே தூரமாகக் கூட இருக்கலாம். இப்போது நம் மனம், எந்தப் பாதையைத் தேர்ந்தெடுக்கும்?சீக்கிரமாகப் போய்ச் சேர்ந்து விடலாம் என எண்ணுபவர்கள், முரடான பாதையைத் தேர்வு செய்வர்.

கரடு முரடான பாதையில் சென்று வாகனம் பழுது ஏற்பட்டு,அவதிப்பட்டுச் செல்வதை விட சுற்றிச் சென்று விடலாம் என்று நினைப்பவர்கல் அடுத்த வழியைத் தேர்வு செய்வார்கள். கரடு, முரடான பாதயில் சென்று, விரைவாகச் செல்வோரும் உண்டு.

அதே பாதையில் சறுக்கல் ஏற்பட்டு, தாமதமாகச் செல்வோரும் உண்டு. சுற்றுப் பாதையில் சென்றவர் சீக்கிரமாகச் செல்வது கூட நடக்கலாம்.இது ஆமை, முயல் கதை போன்றது தான். வெற்றி பெற வேண்டுமா... மனதை அடக்க வேண்டும். மனதுக்கு கட்டளைகள் பிறப்பிக்க வேண்டும்.ஒவ்வொரு செயலிலும் வெற்ரி பெற அதற்கான அடித்தள்த்தைச் சரியாக அமைத்துக் கொள்ள வேண்டும். அடித்தளம் சரியில்லாத கட்டிடம் சரிந்து விடுவதைப் பார்க்கிறோம். செயலுக்கான அஸ்திவாரம் பலமாக இருக்கட்டும். வெற்றிக்கான படிக்கட்டுகள் பற்றி தொடர்ந்து பார்ப்போம்..உறவுகள் மேம்பட வேண்டும்..! ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் எனக் கூறுவது உண்டு. முன்பே கூறியது போல 'பகுத்தறிவு' என்பது அவரவருக்கு வர வேண்டும். அப்படி வராதவர் களுக்கு 'பட்டறிவு' என்று கூறக் கூடிய அனுபவமாவது வரவேண்டும்.

பொதுவாக, கிராமப்புறங்கலில் கூறுவார்கள்: 'அவனுக்கு சுயபுத்தியும் கிடையாது. சொல் புத்தியும் கிடையாது என்று'. இதில் சுய புத்தி என்பது பகுத்தறிவு, சொல் புத்தி என்பது பின்னணியில் இருப்பவர்களின் அறிவு. பகுத்தறிவு இல்லாதவர்களுக்கு பட்டறிவு கைகொடுக்கும். அனுபவம் என்பது வழுக்கை இழந்த பின்பு கிடைக்கும் சீப்பு போன்றது பயனும் கிடைக்கப் போவதில்லை. ஒரு செயலில் தோல்வி கண்டவர்கள். அடுத்த முயற்சியில் வெற்றியடைவது அவர்கள்துபட்டறிவு கைகொடுப்பதால்தான்.

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி உறவுகள் மேம்படவேண்டும். எப்படி என்கிறீர்களா?.. ஒரு பேருந்தின் நடத்துனர், ஓட்டுனர் இருவரும் ஒருவருக்கு ஒருவர் சமூக உறவுடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லை எனில் என்னவாகும்? நடத்துனர் 'விசில்' கொடுப்பார். ஓட்டுனர் நிறுத்த மாட்டார். ஓட்டுனர் வாகனத்தைக் கிளப்ப மாட்டார். கடைசியில் பயணிகள் பாடுதான் திண்டாட்டம் உறவுகள் மேம்பட் வேண்டுமானால், மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும், கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கடைப்பிடித்துப் பார்க்கலாம். நானே பெரியவன், நானே சிறந்தவன் என்கிற அகந்தையை விட வேண்டும். ஆங்கிலத்தில் இதனை 'ஈகோ' என்பார்கள். அகந்தையால் வென்றவர்களும் இருக்கிறார்கள், அழிந்தவர்களும் இருக்கிறார்கள். அரச பரம்பரையில் வந்த கௌசிகனால் ஒரு பிரம்ம ரிஷியாக, விஸ்வாமித்திரராக வெற்றி பெற முடியாது. அகந்தை இருந்த போதிலும், அவரது உழைப்பு இருந்தது. அந்தப் பட்டத்தைப் பெறுவதற்காக அவர் பட்ட கஷ்டங்க ஏராளம். இயற்றிய தவங்களை வரலாறு கூறும்.

அகந்தையால் அழிந்தவர்களுக்கு உதாரணமாக சர்வாதிகாரிகள் ஹிட்லர், முசோலினி போன்றவர்களைக் கூற முடியும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதன் மூலம் வாழ்க்கை வளமானதாகும். உதாரணமாக இருவர் சண்டையிடுகின்றனர். பதிலுக்குப் பதில் மாறி மாறிப் பேசிக் கொண்டே செல்கின்றனர் இப்போது என்னவாகும்? சற்றே சிந்தியுங்கள். பேச்சு வளர்ந்து கொண்டே போகும். நீயா? நானா? என்கிற கேள்விக்கு விடை அறியும் வரை இந்தப் போராட்டம் தொடரவே செய்யும். வழக்கு மன்றத்திற்கு சென்று, தங்களது பிரச்சினைகளாக இரு தரப்புமே, வழக்கறிஞர் அமர்த்தி கடைசியில் சம்பாதித்த பொருள் அனைத்துமே இழந்து அதன் பின் புத்தி வரும். கீழ் கோர்ட்டில் தோற்றால், மேல் கோர்ட்டில் முறையிட்டு வென்றே தீருவது என்கிற எண்ணத்தில் செயல்படுவதை விட ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் பாருங்கள்.

அதனால் உங்களது பொன்னான

நேரம் சேமிக்கப்படுகிறது.உழைப்பு மற்றும் பணம் சேமிக்கப்படுகிறது. மொத்தத்தில் இருவருக்குமேநல்லது நடக்கிறது. ஒரு காரியத்தில் ஒருவர் விட்டுக் கொடுக்கும்போது, இன்னொரு காரியத்தில் மற்றவர் விட்டுக் கொடுப்பது சகஜமாகி விடுகிறது. சிறு கணக்கைக் கொண்டு உதாரணம் காட்ட முயற்சிக்கிறேன். ஒரு கூட்டலும் (பிளஸ்), ஒரு கழித்தலும் (மைனஸ்) சேரும் போது பூஜ்யம் ஆகின்றது. அதேசமயம் கூட்டலும், கூட்டலும்

சேர்ந்தாலோ, கழித்தலும், கழித்தலும் சேர்ந்தாலோ இருமடங்காகி விடுகிறது. இந்த உதாரணம் உங்களுக்கு நிச்சயம் புரிந்து இருக்கும் ஒருவருக்கொருவர் ஈகொ விட வேண்டும் என்பதைப் போலவே, அர்த்தமில்லாமலும், பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டே இருப்பதை நிச்சயம் கைவிட வேண்டும். ஏனெனில் அர்த்தமில்லாத, பின் விளைவு அறியாத பேச்சி 'வதந்தி' ஆகும். வதந்தி என்பது தீயைக் காட்டிலும் மிக வேகமாகப் பரவக் கூடியது. அதனால் ஆபத்தே தவிர, யாருக்கும் எவ்வித பிரயோஜனமும் கிடையாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எந்த விஷயத்தையும், பிரச்சினையையும், நாசூக்காக கையாளுங்கள். குழந்தை, புகை பிடிப்பதாக அறிகிற தந்தை என்னசெய்ய வேண்டும்? ஊரைக் கூட்டி, நாலு பேருக் குத் தெரிகிற மாதிரி அடி, உதை கொடுத்து அட்வைஸ் செய்வதை விட்டு, த்னிப்பட்ட முறையில் அத்தவறினால் ஏற்படும் பாதிப் புகளை பக்குவமாக எடுத்துக் கூறினால், திருந்து வதற்கான வாய்ப்பாக அமையும்.

இல்லையெனில் திருந்து வதற்குப் பதிலாக நிலைமை, மேலும் மோசமாகி விட வாய்ப்பு அதிகம். இந்த இடத்தில் ஒரு குட்டிக் கதை நினைவுக்கு வருகிறது. ஒரு தாய், தனது குழந்தையை ஒரு சாமியாரிடம் அழைத்து வந்தாள்.

தனது குழந்தை இனிப்பை மிகவும் விரும்பிச் சாப்பிடு வதாகவும், அதனால் உடம்பு நாளுக்கு நாள் இளை த்தி



வருவதாகவும் கூறி அவனு க்குப் புத்திமதி கூறுமாறு வேண்டினாள். சாமியார், அந்தப் பெண்மணியை சில தினங்கள் கழித்து வருமாறு கூறினார். அதன்படியே, அந்த அம்மாவும் சில நாட்கள் கழித்து வந்தாள். இப்போது அந்த சாமியார், சிறுவனை ஒரு ஸ்வீட் ஸ்டாலில் வேலையில் சேர்க்குமாறு சொன்னார். அந்த பெண்மணிக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் சாமியார் சொல்வத்ஹில் ஏதாவது அர்த்தம் இருக்கும் என்று நினைத்தவாறே ஒரு இனிப்புக் கடையில் வேலைக்குச் சேர்த்தாள்.

என்ன ஆச்சரியம்? பையன் இனிப்பை அறவே வெறுக்க ஆரம்பித்தான். உடம்பும் தேறத் தொடங்கியது.

சாமியாரிடம் நன்றி சொல்வதற்காக அந்த அம்மா வந்தாள். பையன் தற்போதைய நிலையைக் கூறிவிட்டு 'சாமி, ஒரு சின்ன சந்தேகம்?' என்று கேட்டாள். 'என்னம்மா?'என்று சாமியாரும் கேட்டார்.'முதல் நாள் வந்தபோதே, ஸ்வீட் ஸ்டாலில் சேர்க்க வேண்டும் என்று கூறாமல் சில நாட்கள் கழித்து வரச் சொன்னீர்களே. அதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள்லாமா?' என்று கேட்டாள்.

'அம்மா! நீங்கள் முதல் நாள் வந்தபோது, நானும் இனிப்பை விரும்பிச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தேன். ஒருவருக்கு புத்திமதி சொல்ல வேண்டுமானால், அதற்குரிய தகுதி, புத்திமதி சொல்பவருக்கு இருக்க வேண்டும். எனவேதான் நான் இனிப்பை விடுவதற்கு சில தினங்கள் அவகாசம் கேட்டேன்' என்றார்.

'புரிகிறது, சாமி! ஸ்வீட் ஸ்டாலில் வேலையில் சேர்க்கச் சொன்னதற்கு என்ன காரணம்? அதையும் தெரிந்து கொள்ளலாமா?' என்றாள்.

'முள்ளை முள்ளால் எடுப்பது போலத் தான் இதுவும். இனிப்புக் கடையில் எவ்வளவு தான் இனிப்பைச் சாப்பிட முடியும்? அதுவும் இல்லாமல் மொத்தமாக ஒரே இடத்தில் அவ்வளவு இனிப்பைப் பார்க்கும்போது சலிப்பு ஏற்படும் என நினைத்தேன்.

நான் நினைத்தது சரியாகி விட்டது' என்றார்.இந்தக் கதையில் இருந்து தெரிந்து கொள்வது என்ன? எந்தப் பிரச்சினையையும் அந்தக் கோணத்தில் இருந்து சிந்திக்க வேண்டும் என்பதே. அடுத்ததாக, சில நேரங்களில், சில சங்கடங்களை சகித்துத்தான் ஆக வேண்டும்.

**- தொடரும்...**

# புதுமுகங்கள் காட்டில் மழை!



அபி சரவணன்

## 'திரு. வாக்காளர்'

அண்மையில் பூஜை போட்ட புதுப்படங்களின் நாயகனோ அல்லது நாயகியோ புதுமுகம் என்பது கூடுதல் தகவல், அது பற்றிய சிறப்புத் தொகுப்பு இதோ!

'திரு. வாக்காளர்'

*1986* **law Batch Media Productions** தயாரிக்கும் முதல் படம்'.திரு. வாக்காளர்'.

இப்படத்தின் இயக்குநர் தி.இரமேஷ் பிரபாகரன். இவர் வாசு, மகேந்திரன் ஆர்.வி.உதயகுமார் ஆகியோரிடம் உதவி இயக்குநராக பணிபுரிந்தவர். இவர் ஏற்கனவே கன்னடத்தில் கள்மஞ்சா என்ற வெற்றிப் படத்தை இயக்கி உள்ளார்.

இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிகர் அபி சரவணன் நடிக்கிறார். மேலும் 3 புதுமுகங்கள் நடிக்க உள்ளனர்.



## பார்க்கத் தோணுதே!

வாசவி பிலிம்ஸ் என்ற பட நிறுவனம் சார்பாக க்ஷி.ளீ.மாதவன் தயாரிக்கும் படத்திற்கு 'பார்க்கத் தோணுதே' என்று பெயரிட்டுள்ளனர். இந்த படத்தில் ஹர்ஷா கதானாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக சாரா நடிக்கிறார். மற்றும் பாண்டு, அப்பு இவர்களுடன் மற்றும் பலரும் நடிக்கிறார்கள்.

இது ஒரு கிராமத்து பேய்ப் படம் என்பது கூடுதல் தகவல்.

## 100 புதுமுகங்கள் நடிக்கும் 'மதம்'!

அறிமுக இயக்குநர் ரஜினி இயக்கும் 'மதம்' திரைப்படத்தில் 100 புதுமுகங்கள் நடிக்கின்றனர். பணத்துக்காக எதையும் செய் யும் கும்பலிடம் மாட்டிக் கொள் ளும் ஒரு குடும்பத் தையும், அவர்கள் சந்திக்கும் பிரச்னைகளையும் மையமாக வைத்து உருவாகியுள்ள படம் 'மதம்'. விஜயசங்கர் கதாநாயகனாக அறிமுகமாகிறார். சவரக்கத்தி படத்தில் நடித்துள்ள ஸ்வாதிஸ்தா கதா நாயகியாக நடிக்கிறார். காளி காம்பாள் பிலிம்ஸ் சார்பில் எம்.ஹரிஷ் குமார் தயாரிக்கிறார்.






# மலையாளப் படம் அல்ல

-விமர்சனம்

தண்ணீர் பிரச்சினையை மையமாக வைத்து ஏற்கனவே சில படங்கள் வந்துள்ளன. இந்த கேணி படத்தில் கிணற்றையும், இரு மாநில எல்லையையும் மையமாக வைத்து உணர்வுப்பூர்வமான படத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

மலையாள இயக்குனர் எம்.ஏ.நிஷாத் தமிழில் இயக்கியிருக்கும் முதல் படம். படத்தின் ஆரம்பக் காட்சிகள் கேரளாவில் நடப்பதால் பெரும்பாலான வசனங்கள் மலையாளத்தில் உள்ளன. ஒரு மலையாளப் படத்தைப் பார்க்கிறோமா என்ற உணர்வைத் தருகிறது.

அரசியல்வாதிகளால் பாதிக்கப்பட்டு பொய் வழக்கு போடப்பட்டு சிறையில் தள்ளப்படுகிறார் ஜெயப்பிரதாவின் கணவர். அவர் அங்கேயே மரணமும் அடைகிறார். அதன்பின் ஜெயப்பிரதா கணவரது ஆசைப்படி அவர்களது ஊருக்கு வருகிறார். தமிழ்நாடு, கேரள மாநில எல்லையில் இருக்கும் அவர்களது வீட்டிற்குச் சொந்தமான கிணறு, மாநிலப் பிரிவினையின் போது கேரளாவிற்குச் சென்று விடுகிறது. அந்தக் கிணற்றுத் தண்ணீரை தமிழ்நாட்டு எல்லையில் இருக்கும் ஜெய்பிரதாவும், அவரது ஊர் மக்களுக்கும் பயன்படுத்த தடை உள்ளது. அதை எதிர்த்து ஊர் மக்களின் ஆதரவுடன் போராடுகிறார் ஜெயப்பிரதா. அதில் அவர் வெற்றி பெற்றாரா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

இந்த மாதிரியான கதையில் கொஞ்சம் வயது முதிர்ந்த ஜெயப்பிரதாவை கதையின் நாயகியாக இயக்குனர் நடிக்க வைத்ததன் காரணம் ஏன் எனத் தெரியவில்லை.ஜெயப்பிரதாவின் வெள்ளை வெளேர் தோற்றமும், அந்தத் தோற்றத்திற்குப் பொருந்தாத காட்டன் புடவையும் அவரது கதாபாத்திரத்திற்குப் பொருத்தமாகவே அமையவில்லை. ஆனாலும், நடிப்பைப் பொறுத்தவரையில் ஜெயப்பிரதாவிடம் அவரது அனுபவம் வெளிப்படுகிறது. அனுஹாசன் ஊர் பெண்களில் ஒருவராக சிறுவனுக்கு அம்மாவாக நடித்திருக்கிறார்.

இவரையும் முடிந்த அளவிற்கு கிராமத்துப் பெண்ணாக மாற்ற முயற்சித்திருக்கிறார்கள். நடிப்பில் மிக இயல்பாக நடித்திருக்கிறார் அனுஹாசன்.

அரசு அதிகாரியாக ரேவதி, சில காட்சிகள் மட்டுமே வருகிறார். ஊர் தலைவராக பார்த்திபன். அவருக்கே உரிய நக்கலான வசனங்கள் இந்தப் படத்திலும் உண்டு. வக்கீலாக நாசர், எந்த மேக்கப்பும் இல்லாமல் இயல்பாக வந்து போகிறார்.

ஊரில் இருக்கும் நாயர் டீக்கடை அங்கு இருக்கும் முதலாளி, டீ மாஸ்டர், நண்பர் ஆகியோர் படத்தின் கலகலப்புக்கு கொஞ்சம் உதவுகிறார்கள். மந்திரியாக தலைவாசல் விஜய். அதிகாரத் தோரணையை அற்புதமாகக் காட்டியிருக்கிறார்.

படத்தில் இளமையான நட்சத்திரங்கள் அதிகம் இல்லை என்பது பெரும் குறை. எல்லாருமே சீனியர் நடிகர்கள் தான். ஜெயப்பிரதா ஆதரவளித்து அழைத்து வரும் அந்த முஸ்லிம் பெண்ணாக பார்வதி நம்பியார். இவர் மட்டுமே படத்தில் இளம் நடிகை. அழகாக இருக்கிறார், இவருக்கு இன்னும் சில காட்சிகளையாவது வைத்திருக்கலாம்.



# சாட்சி கையெழுத்து போட்டால் பிரச்னை வருமா?

இதனைப்பற்றி தெரிந்து கொள்வதற்கு முன், "கேரண்டி கையெழுத்து" (ஜாமீன்) மற்றும் "சாட்சி கையெழுத்து" என்ற இருவகைகளை அறிந்து கொண்டால் மிக இலகுவாக நீங்களே புரிந்து கொள்வீர்கள்.

"சாட்சி கையெழுத்து என்பது எந்த ஒரு ஆவணத்திலும் கையெழுத்து இட்டதற்கு சாட்சியாக இரண்டு நபர்களை கையெழுத்து போட வைப்பதுதான். அதாவது, அந் த ஆவணத்தில் கையெழுத்து போட் டவர் இந்த நபர்தான் என்பதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் போடும் கையெழுத்துதான் சாட்சி கையெழுத்து. உயில், தானம் போன்ற ஆவணங்களில் சாட்சி கையெழுத்து அவசியம்வங்கியில் கடன் வாங்கும்போது கேரன்டி கையெழுத்து கேட்பார்கள்.

கேரன்டி கையெழுத்து என்பது கடன் வாங்கும் நபர் கடனை திரும்பச் செலுத்த வில்லை எனில் கேரன்டி கையெழுத்து போ ட்டவர் தான் அந்த கடனை திரும்பச் செலுத்த கடமைப்பட்டவர் ஆவார். நேரடியாக கடன் வாங்கிய நபரை அணுகாமல் கேரண்டி கையெழுத்து போட்டவரிடமே கடனை கேட்க வங்கிக்கு உரிமை உண்டு. அந்த கடனில் அவருக்கும் பங்குண்டு என்பதே கேரண்டி கையெழுத்தின் சாராம்சம்.

கேரண்டி கையெழுத்துக்கும், சாட்சி கையெழுத்துக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக் கிறது. ஆவணத்தில் தனக்கு முன்பாக அதை எழுதிக் கொடுத்தவர் கையப்பமிட்டார் என்பதற்கு ஆதாரம்தான் சாட்சிக் கையெழுத்து. அதற்கு மட்டுமே சாட்சி பயன்படுவார். தவிர, அந்த ஆவணத்தில் இருக்கும் மற்ற விஷயங்களுக்கு சாட்சி கையெ ழுத்து போட்டவர் பொறுப்பாக மாட்டார்.

சாட்சி கையெழுத்து போடும்போது அந்த ஆவண த்தில் இருக்கும் சங்கதிகள் அல்லது தகவல்கள் சாட்சி கையெழுத்து போடும் நபருக்கு தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அதாவது ஆவண த்தின் தன்மை, உரிமை மாற்றம் என எதுவாக இருந்தாலும் அதை சாட்சி தெரிந்து கொள்ள, தெரிந்திருக்க வேண்டிய அவசிய மில்லை. (நெருங்கிய உறவினர் தயாரித்த ஆவண த்தில் கையெழுத்து போடுகையில் விதி விலக்கு உண்டு) சாட்சி கையெழுத்து போடுபவருக்கு என்ன சிக்கல்வரும்? நில அபகரிப்பு மோசடி வழக்கு தொடுக்கபடும் போது, இந்த நிலத்தை நான் விற்கவில்லை இந்த கையெழுத்து என்னுடையது இல் லை என அந்த நிலத்தை விற்ற நபர்கள் சொல்லும்போது. அல்லது பு ரோநோட்டை எழுதி கொடுத்தவர் அ தில் உள்ள கையெழு த்தை மறுக்கும் போது அந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்ட நபர்களை நீதி மன்றம் விசாரணைக்கு வரச் சொல்லும். இந்த இடத்தில்தான் சாட்சி கை யெழுத்து போடும் நபருக்கு பொறுப்பு வருகிறது. அந்த ஆவணத்தில் கையெழுத்து போட்டது இவர்தான் என சாட்சி கையெழுத்து போட்ட நபர் சொல்லும் சாட்சிதான் மிக முக்கியமாக கருதப்படும். இந்த நேரத்தில் மட்டும்தான் சாட்சி கையெழுத்து போட்டவர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்படுவார்.


நன்கு தெரிந்தவர் உங்களிடம் கேட்டுக் கொண்டால் ஒழிய, முன்பின் தெரியாதவர்களுக்கு சாட்சி கையெழுத்து போட வேண்டாம். சிலர் நூறு அல்லது இருநூறு கொடுப்பதாகவும் ஆசை காட்டுவார்கள். பணத்திற்காக ஆசைப்பட்டு யார் யாருக்கோ கையெழுத்து போட்டால் பிற் பாடு நீதிமன்றத்தின் படிகளை அடிக்கடி ஏற வேண்டியிருக்கும்.

# மாரடைப்பு பற்றி...

# மருத்துவர் சொக்கலிங்கம்

S = SMILE
T = TALK
R = RAISE BOTH ARMS

ஒரு திருமண நிகழ்விலோ, பொது இடங்களிலோ அல்லது வீட்டில் இருக்கும் போதோ, ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தடுமாறுவதை, அல்லது கீழே விழுவதைக் கண்டால், உடனே நாம் அவர் மேல் கவனம் செலுத்த வேண்டும். ஆனால், அவர் நம்மிடம் தனக்கு ஒன்றும் இல்லை, நான் நன்றாகத்தான் இருக்கிறேன் என்றெல்லாம் சொல்லுவார். நாமும், ஏதாவது பித்த மயக்கமாக இருக்கும் என்று லேசாக விட்டு விடுவோம் ஆனால் உண்மையில் அது ஒரு மாரடைப்புக்கான அறிகுறியாக இருக்கும் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள்!!




மாரடைப்பை முன்கூட்டியே உணரக் கூடிய ஒரு உறுப்பு நமது தலைமைச் செயலகமான மூளையாகும். மூளை அறிவிக்கும் முன்னெச்சரிக்கையே அந்த தடுமாற்றமாக இருக்கலாம். அதனை ஷி ஜி ஸி அதாவது,

ஷிவிமிலிணி (சிரிக்க சொல்வது),

ஜிகிலிரி (பேச சொல்வது),

ஸிகிமிஷிணி ஙிளிஜிபி கிஸிவிஷி (இரண்டு கைகளையும் மேலே தூக்க சொல்வது)

இது போன்ற செயல்களை செய்யச் சொல்வது மூலம், அவர்களுக்கு ஏற்படப் போகும், மாரடைப்பை (ஹார்ட் அட்டாக்) முன்கூட்டியே கண்டு பிடித்து விடலாம். அதாவது, இம்மூன்றையும் அவர் சரியாகச் செய்ய வேண்டும்! இல்லையேல் பிரச்சனை பெரிதுதான்!


உடனடியாக, மருத்துவமனைக்கு கொண்டு செல்வதால், உயிரிழப்பை தடுக்கலாம்.

மருத்துவர்கள் கூறும் எச்சரிக்கை என்ன வென்றால், இந்த சோதனை செய்த, 3 மணி நேரத்திற்குள் மருத்துவ மனைக்கு வந்து விட்டால் போதும், எளிதாக உயிர் இழப்பை தடுத்து விடலாம், என்று உறுதியாக கூறுகிறார்கள். இவை மூன்றும், அவர் நல்லபடியாக சரியாக செய்து விட்டார் என்றால், மேலும் உறுதிபடுத்த ஒரு முக்கியமான செயலை செய்ய வேண்டும் என்று சமீபத்திய மருத்துவ ஆய்வு கூறுகிறது.

அதாவது, அவருடை நாக்கை நீட்ட சொல்ல வேண்டும், அவர் தனது நாக்கை நேராக நீட்டிவிட்டார் என்றால், அவர் நார்மலாக, நலமாக உள்ளார் என்று தீர்மானிக்கலாம் அவ்வாறு நேராக நீட்டாமல் ஒரு பக்கமாக அதாவது வலது அல்லது இடது பக்கமாக வளைத்து நீட்டினால், அடுத்த 3 மணி நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும், அவருக்கு அட்டாக் வரலாம்.

இதனை படிக்கும், அன்பர்கள் வீட்டில் உள்ள அனைவரிடமும், உறவினர் களிடமும், நண்பர்களிடமும், ஜாதி, மத பேதமின்றி, மனிதாபிமான அடிப்படையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமாறு, கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவர்களின் புள்ளி விவரப்படி, இதனை அனைவரிடமும் எடுத்து சொல்வதன் மூலம் 10 சதவீத மரணத்தை தவிர்க்கலாம் என்றும் சொல்கிறார்!!



## ஏன் பதில்கள்

# ஜெயலலிதா இல்லாததால் அ.தி.மு.க அமைச்சர்கள் சுதந்திரமாக இருப்பதாக தெரிகிறதே?



ஆமாம் அதனால் தான் அவருக்கு சிலை வைப்பதிலும் படத்தை திறப்பதிலும் முறையாக நடந்துகொள்ளவில்லை ஜெயலலிதா இறந்த பிறகு அந்த கட்சியில் ஆளாளுக்கு நாட்டாமை செய்கிறார்கள்.

ஓ.பி.எஸ். ஈ.பி.எஸ். இருவரையும் தங்கள் கொண்டு வந்த பிரதமர் மோடி சசிகலாவையும் அவரது குடும்பத்தினரையும் பழிவாங்குகின்ற நடடிவக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றத் சாட்டு எழுந்து உள்ளது. சசிகலா கைது, தினகரன் கைது, இரட்டை இலை முடக்கம், 200இடங்களில் ரெய்டு என எந்த தொல்லைகளுக்கும் அஞ்சாமல் அரசியலை தொடர்வதாக தினகரன் சொல்கிறார்.

அமைச்சர்கள் தினகரனை கடுமையாக தாக்கி பேசுகிறார்கள் குறிப்பாக அமைச்சர் ஜெயகுமார் அவரை பைத்தியம் என்று குறிப்பிடுகிறார். சிலை திறப்பு விழாவில் இரண்டு ரிமோட் வைத்து சிலையை திறக்கிறார்கள் மீண்டும் ஓ.பி.எஸ், தர்மயுத்தம் தொடங்குவார் என்று தெரிகிறது.

ஜெயலலிதாவின் சிலையை நடிகை காந்தி மதி போலவும் முன்னாள் அமைச்சர் வளர்மதி போலவும், கே.பி. சுந்தரம்பாள் போலவும் இருப்பதாக சமூக வலைதளங்களில் கடுமையாக விமர்சனம் செய்யப்படுகிறது. ஒரு வேளை ஜெயலலிதா மீது தங்களை அடக்கி வைத்த கோபத்தால் வேண்டுமென்றே இப்படி சிலை வைத்திருக்கிறார்கள் என்றே தெரிகிறது.

### புதுவை முதல்வர் நாராயணசாமி எப்படிக் காலம் தள்ளுகிறார் ?



அதுதான் நமக்கும் புரியவில்லை. பிரதமர் மோடி பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும் போது, "அடுத்த ஆண்டு காங்கிரஸ் சார்பில் இருக்கப் போகின்ற ஒரே மாநில முதலமைச்சர் உங்கள் நாராயணசாமியாகத் தான் இருக்க முடியும்" என்று சொல்லி இருக்கிறார். கவர்னர் கிரண் பேடி அவர்கள் தரும் தொல்லைகள், சொந்தக் கட்சிக்காரார்கள் தரும் உளைச்சல் எல்லாம் மீறி நாராயணசாமி ஆட்சி நடத்துவது என்பது அதிசயம்தான். ஒருவேளை மத்திய அமைச்சராக அவர் இருந்தபோது அவர் கற்றுக் கொண்ட அனுபவம் கைகொடுக்கிறதோ, என்னவோ?

## சிரியாவில் குழந்தைகள் ரத்தம் சொட்டச் சொட்ட, கொல்லப் படுகிறார்களே?



கல்நெஞ்சக் காரர்களுக்கும் கண்ணீரை வரவழைக்கும் படுபாதகச் செயல் அது. கிளர்ச்சியாளர்களை எதிர்த்து அந்நாட்டு அரசு

# எம் பதில்கள்

ரஷ்ய இராணுவத்தினரின் உதவியோடு இரசாயனக் குண்டுகளை எறிந்து கண்மூடித்தனமாகத் தாக்குகின்றது. இதனால் ஏதுமறியாத பால் மனம் மாறாத 500க்கும் மேற்பட்ட குழந்தைகள் ரத்தம் சொட்டச் சொட்ட கொல்லப்படுகிறார்கள் என்பது மனதில் ரத்தம் உறைகின்ற செய்தி.

## பார்த்தசாரதி கோயிலுக்குச் சென்றிருக்கிறீர்களா?

வைணவக் கோயில்களில் ஸ்ரீரங்கத்துக்கு அடுத்தபடியாக திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் சிறப்பிற்குரிய ஒன்றாகப் பேசப்படுகிறது.

இந்தக் கோயிலுக்குக் குடும்பத்தினருடன் சென்று இருந்தேன். அங்கு ஏன் தான் சென்றேன் என்றாகி விட்டது. அங்குள்ள நிர்வாகிகளின் அலட்சியம், கோயிலைச் சுற்றியுள்ள குப்பைங்கூளங்கள், துர்நாற்றங்கள் ஆகியவற்றில் இருந்து பக்தர்களை அந்தப் பெருமாள் தான் காப்பாற்ற வேண்டும்.



# செல்வவளம் பெற
# காயத்ரி
# மந்திர வழிபாடு



**‘‘மந்திஓம் பூர்புவ ஸ்வஹ**
**தத் ஸ்விதூர் வரேணியம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோநஹ ப்ரசோதயாத்**

இதுதான் காயத்ரி மந்திரமாகும். இதன் பொருள் “பூ உலகம், மத்திய உலகம், மேல் உலகம் மூன்றுக்கும் சக்தியான அந்தப் பரம ஜோதி சொருபமான சத்தியத்தை நான் தியானிக்கிறேன். அந்த பரம சக்தி ஒளி என் அறிவைத் தூண்டி என்னை உண்மையை அறிந்த நிலைக்கு உயர்த்தட்டும்” என்பதாகும். காயத்ரி மந்திரம் சூரியனை குறித்தே உருவாக்கப்பட்டது என்பது சிலரது வாதமாகும். காயத்ரி மந்திரம் உலகுக்கு பொதுவானது. பொதுவான பரம்பொருளை தியானிக்க சொல்வதால் எல்லாரும் இந்த மந்திரத்தை உச்சரித்து பயன் பெறலாம். காலை, மதியம், மாலை மூன்று நேரமும் காயத்ரி மந்திரம் சொல்வது நல்லது. ஆலய வழிபாடுகளின் போது ஒவ்வொரு சன்னதிலும் இறை மூர்த்தத்துக்கு ஏற்ப காயத்ரி மந்திரம் சொன்னால் உயர்ந்த பலன்கள் கிடைக்கும். காயத்ரி மந்திரத்தை நம் இஷ்டத்துக்கு உச்சரிக்கக் கூடாது. 5 இடங்களில் நிறுத்தி ஜெபிப்பதே சரியான முறையாகும்.

முதலாவது நிறுத்தம் ஓம், இரண்டாவது நிறுத்தம் பூர் புவஸ்வஹ. மூன்றாவது நிறுத்தம் தத் ஸ்விதூர் வரேணியம். நான்காவது நிறுத்தம் பர்கோ தேவஸ்ய தீமஹி. ஐந்தாவது நிறுத்தம் “தியோ யோ நஹ ப்ரசோதயாத்” என்று இருத்தல் வேண்டும். காயத்ரி மந்திரத்தை முதலில் சொல்லத் தொடங்கும் போது 9 தடவை சொல்ல வேண்டும். அடுத்த வாரம் அதை 18 ஆக உயர்த்த வேண்டும். மூன்றாவது வாரம் 27 தடவை சொல்ல வேண்டும். இப்படி ஒன்பது ஒன்பதாக உயர்த்தி தினமும் காயத்ரி மந்திரத்தை 108 தடவை சொல்லும் வகையில் உங்களை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். காயத்ரி மந்திரம் 27 அட்சரங்களைக் கொண்டது. காயத்ரி மந்திரம் எப்படி தோன்றியது? ஒரு சமயம் ஞானம் பெற விரும்பிய முனிவர்கள் வேதக் கடலைக் கடைந்தனர். அப்போது “த்ரயீ” என்ற வேதசாரம் கிடைத்தது. அதை காரணமதி எனும் மத்தினால் கடைய அது காயத்ரி வடிவமாக உருவம் பெற்றது.

காயத்ரி தேவிக்கு 5 முகங்கள் உண்டு. பஞ்ச பூதங்களும் காயத்ரி தேவியில் அடக்கம் என்பதை இந்த உருவம் உணர்த்துகிறது. காயத்ரி தேவி ரத்தின மாலை அணிந்து, கமண்டலம், தாமரை, ஜெபமாலை ஆகியவற்றை ஏந்தி தாமரை ஆசனத்தில் வீற்றிருப்பாள். காயத்ரி மந்திரத்துக்கு சாவித்திரி என்றும் சரஸ்வதி என்றும் பெயர்கள் உண்டு. எனவே இந்த மந்திரம் காலையில் காயத்ரிக்காகவும், மதியம் சாவித்திரிக்காகவும், மாலையில் சரஸ்வதிக்காகவும் ஜெபிக்க வேண்டும். காலையில் காயத்ரிதேவி குழந்தை வடிவமாக காட்சி அளிப்பாள். அப்போது அவள் ரிக் வேதம் உச்சரிப்பாள். மதியம் நடுத்தர வயது பெண் போல காயத்ரி காட்சி அளிப்பாள். அப்போது

அவள் யஜுர் வேதத்தை சொல்வாள். மாலையில் காயத்ரி முதிர்ந்த பெண்ணாகத் தோன்றுவாள். அப்போது சாமவேதம் உச்சரிப்பாள்.

இதன் மூலம் காயத்ரி எல்லா மந்திரங்களுக்கும் தாய் போன்றவள் ஆகிறாள். ஆகையால் எப்போதும் காயத்ரி மந்திரத்தை உச்சரித்த பிறகே மற்ற மந்திரங்களை சொல்ல வேண்டும். காயத்ரி மந்திரத்தை யார் ஒருவர் தினமும் விடாமல் சொல்லி வருகிறாரோ நிச்சயம் அவர் செல்வந்தர் ஆகி விடுவார் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. பலர் வாழ்வில் இது நடந்துள்ளது. ஆனால் காயத்ரி மந்திரம் சொல்வதற்கு மனத்தூய்மையும் உடல் தூய்மையும் மிக, மிக அவசியம். சுத்தமான இடத்தில் இருந்து தான் காயத்ரி மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். காயத்ரி மந்திரத்தை எப்போது சொல்லத் தொடங்கினாலும் 27 தடவை சொல்வது மிகவும் நல்லது. காயத்ரி மந்திரத்தை வெளியில் கேட்கும்படி உச்சரித்தால் 10 மடங்கே பலன் கிடைக்கும். உதடுகள் மட்டும் அசைந்தபடி கூறினால் 100 மடங்கு பலன் கிடைக்கும்.

ஆனால் உதடு கூட அசையாமல் மனதுக்குள் காயத்ரி மந்திரத்தை சொல்லி வந்தால் ஆயிரம் மடங்கு பலன் உண்டாகும். ஞாயிற்றுக்கிழமை மாலை 4.306 மணி வரையிலான ராகு காலத்தில் காயத்ரி மந்திரத்தை கூறினால் நாம் எதிர்பார்க்கும் பலன்கள் வந்து சேரும். தினமும் காயத்ரி மந்திரம் சொல்லி வருபவர்களுக்கு "ஆத்மசுத்தி" கிடைக்கும். ஆலயத்தின் எந்த பகுதியில் நின்றும் காயத்ரி மந்திரத்தை உச்சரிக்கலாம். ஆனால் மனம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதே முக்கியம். கும்பாபிஷேக திருப்பணிகள் நடைபெறும் போது யாக சாலைகள் அருகில் அமர்ந்து காயத்ரி மந்திரம் சொல்லாம்.

இது 100 மடங்கு பலன்களை அதிகமாக தரும். காயத்ரி மந்திரத்தை சொல்ல, சொல்ல குடும்பத்தில் மங்களம் உண்டாகும். அதோடு நான்கு வேதங்கள் ஓதியதன் பலன் கிடைக்கும்.

"மூன்று வருடங்கள் காயத்ரி மந்திரத்தை ஜெபித்து வருவர், வாயு போல சுதந்திரமாக இயங்கி பிரம்மத்தை சென்று அடைவார் என்று மனுஸ்மிருதி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலயத்துக்கு செல்லும் போதும், மற்ற நேரங்களிலும் காயத்ரி மந்திரத்தை ஜெபித்து மனம் பக்குவப்பட்டு விட்டால், அவர் எந்த ஒரு செயலிலும் நிதானமாகவும் தெளிவாகவும் இருப்பார். காயத்ரி மந்திரத்தை தினமும் மூன்று நேரம் உச்சரிப்பவர்கள் எல்லா விஷயங்களிலும் மிகச் சரியான முடிவு எடுப்பவர்களாக இருப்பார்கள். சத்தியவான் உயிரை காப்பாற்ற சாவித்திரி தேவிக்கு காயத்ரி மந்திரமே உதவியது. முனிவரின் சாபத்துக்கு எதிராக கால கதியையே ஸ்தம்பிக்க வைத்த நளாயினிக்கு உதவியது காயத்ரி மந்திரமே. மும்மூர்த்திகளின் சோதனையை அனுசுயா தேவி அறிந்து கொள்ள காயத்ரி மந்திரமே உதவியாக இருந்தது.

14 ஆண்டுகள் வனவாசம் சென்ற ராமர் லட்சுமணர் இருவருக்கும் சோர்வு ஏற்படாமல் இருக்க காயத்ரி மந்திரமே உதவியாக இருந்தது. சுருக்கமாக கூறினால், அவரவர் கோரிக்கைக்கு ஏற்ப, அந்தந்த தெய்வத்துக்கு உரிய காயத்ரி மந்திரங்களை ஆலய வழிபாடுகளின் போது சன்னதி முன்பு அமர்ந்து ஜெபித்தால், வாழ்வில் எந்த கஷ்டமும் வராது. சில ஆலயங்களில் காயத்ரி தேவிக்கு தனி சன்னதி இருக்கும். அங்கு காயத்ரி மந்திரத்தை ஜெபித்தால் முழுமையான பலன்களைப் பெறலாம்.

கடவுளுடன் மிக, மிக எளிமையாக நம்மை இணைப்பது காயத்ரி மந்திரங்கள்தான். எனவே காயத்ரி மந்திரங்களை தெரிந்து கொண்டு ஆலய வழிபாடுகளின் போது அவற்றை பயன்படுத்தி பயன்பெறுங்கள்




# அதிசய மனிதர் ஜி.டி. நாயுடு

## அறிமுகப்படுத்திய மூக்கு வண்டிப் பேருந்து

கோவையில் பஸ் அறிமுகமாகி 96 ஆண்டுகள் நிறைவு நன்றி கூறுவோம் ஜிடி நாயுடுக்கு!

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படும் கோவை மாநகரில் பேருந்து போக்குவரத்து தொடங்கி 96 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

அரசுப் பேருந்தில் செல்லவே அச்சமடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகவே பேருந்துகளை இயக்கி அனைவரையும் அதிசயிக்கச் செய்தவர் தமிழ்நாட்டின் அறிவியல் மேதை ஜி.டி நாயுடு.

ஜி டி நாயுடு கோவையில் முதல் முறையாக அறிமுகப்படுத்திய பஸ் குறித்த சுவாரஸ்யத் தகவல்களைத் தெரிந்து கொள்வோம்.

அமர்ந்த இடத்தில் இருந்து கொண்டே டிக்கெட் கேட்கும் நடத்துநர். தானியங்கி கதவுகள் இருந்தும மூடாத பரிதாபம், சைட் ஜன்னல்கள் போக காலுக்குக் கீழேயும் ஏகப்பட்ட ஓட்டைகளுடன் இருக்கும் பஸ், பொத்துக்கிட்டு ஊத்துதடி வானம் என்று பாட்டுப் பாடாத குறையாக ஓட்டையான மேற்கூரையுடன் மழைக்காலத்தில் பயணிகளை நனைத்தபடி ஓடும் பல பஸ்கள் என்பதுதான் இன்றைய அரசு மற்றும் தனியார் பேருந்துகளின் நிலை. ஆனால் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகவே தானியங்கி டிக்கெட், ரேடியேட்டர் அதிர்வு கருவி, பேருந்து வழித்தட கருவி என அதிசய இயந்திரங்களை கண்டறிந்து மாடர்னாக பஸ்ஸை அறிமுகப்படுத்தி பெருமை சேர்த்தவர் கோவையை சேர்ந்த அறிவியல் மாமேதை ஜி.டி. நாயுடு.

தகவல்



S.Suruthi Lakshmi
XII - STD
VIDYAA VIKASMAT
HR.SEC.SCHOOL
KARAMADAI

கோவையில் இன்றைக்கு ஆயிரக்கணக்கான பேருந்துகள் ஓடினாலும் முதன் முதலாக ஓடிய பேருந்துகளை இன்றைக்கு இருக்கும் பெரியவர்கள் ஆர்வத்துடன் நினைவு கூர்கின்றனர்.

1921ம் வருடத்தின் இறுதியில் கோவையில் ஒரே ஒரு பேருந்து மட்டுமே இயங்கி வந்தது. கோவையிலிருந்து உடுமலைபேட்டைக்கும், பின்னர் பழனிக்கும் சென்று வந்த அந்த பேருந்தில் முப்பதுக்கும் குறைவான இருக்கைகளே இருந்துள்ளது.

பேருந்தின் மேல் தளம் இப்போது இருப்பதுபோல இல்லாமல், நான்கு ஓரங்களிலும் அமைக்கப்பட்டிருந்தன. அதில் மரத்தினால் செய்யப்பட்ட இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தது. இந்த பேருந்தின் முன்னால் என்ஜின் வடிவமைக்கப்பட்டு

இருந்ததால் மூக்கு வைத்த வண்டி என்று பட்டப்பெயர் வைத்து மக்கள் கூப்பிட்டு வந்துள்ளனர்.

இந்த வண்டியின் ஓட்டுனர், நடத்துனர், உதவியாளர், உரிமையாளர் என எல்லா பொறுப்புகளையும் ஏற்று நடத்தியவர் கோபால்சாமி நாயுடுவின் மகன் துரைசாமி நாயுடு என்கிற ஜி.டி.நாயுடு தான். மிகப்பெரிய விஞ்ஞானியான அவர், இந்த பேருந்தை இயக்கியதே ஒரு தனி கதை.

யுனைடெட் மோட்டார் சர்வீஸ்

பருத்தி வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை பொருட்படுத்தாமல் அப்போது மோட்டார், லாரி, பேருந்து போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த வெள்ளைக்காரான ஸ்டேன்ஸ் துரையிடம் பணிக்கு சேர்ந்தார் ஜி.டி நாயுடு.

அவர் நாயுடுவின் திறமையைப் பற்றி கேள்விப்பட்டிருந்ததால் ஒரு பேருந்தைக் கடனாக கொடுத்து தவணை முறையில் கடனைத் திருப்பி அடைத்தால் போதும், அதுவரை தினமும் வசூலாகும் தொகையில் ஒரு பகுதியை தனக்கு அளிக்க வேண்டும் என்றார்.

முதலாளியும் தொழிலாளியுமாக இருந்து முதன்முதலில் பொள்ளாச்சிக்கும் பழனிக்கும் பேருந்தை இயக்கினார் நாயுடு. தனி முதலாளியாக இருக்க விரும்பாத நாயுடு வேறு சிலரையும் கூட்டு சேர்த்துக்கொண்டு யுனைடெட் மோட்டார் சர்வீஸ் என்ற நிறுவனத்தை துவக்கினார்.

அந்நாளிலேயே பிரயாணிகளுக்கான வசதிகள், ஓட்டுனர்களுக்கு தங்கும் இடம் போன்று வசதிகள் செய்யப்பட்டிருந்தன. முதன் முதலாக அவருடைய நிறுவனத்தைச் சேர்ந்த பேருந்துகள் வந்து, புறப்படும் நேரத்தைக் காட்டும் கருவி ஒன்றைக் கண்டுபிடித்து பேருந்து நிலையங்களில் வைத்து சாதனை படைத்தார். பயணச்சீட்டுகள் வழங்குவதற்கு அந்த காலத்திலேயே ஒரு இயந்திரத்தை தன்னுடைய சிறிய தொழிற்சாலை யிலேயே தயாரித்து பயன்படுத்தினார்.

மோட்டார் ரேடியேட்டருக்கு இணையான ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்தன் மூலம் ரேடியேட்டருக்கு அடிக்கடி தண்ணீர் ஊற்ற வேண்டிய அவசியம் அவருடைய பேருந்துகளுக்கு இருந்ததில்லை.


எஞ்சின் ஓடிக்கொண்டிருக்கும்போதே அதன் அதிர்வு விகிதம் அதிகமா, குறைவா என்பதைக் கண்டுபிடிக்க 'வைப்ரேசன் டெஸ்டர்' என்ற இயந்திரத்தையும் கண்டுபிடித்து அயல்நாட்டு விஞ்ஞானிகளுக்கு இணையாக நம் நாட்டிலும் அறிவியல் துறையில் சாதனைப் புரிய இயலும் என்று உலகுக்கு நிருபித்தவர் .

பல்கலைக்கழகப் படிப்பில்லாதிருந்தும் அவர் இத்தகைய கருவிகளை கண்டறிந்து சாதனை படைத்தார். இவருடைய பேருந்தில் பயணிகளை கவர பேருந்தில் தேநீர் பழச்சாறு வகைகள் கொடுக்கப்பட்டதாகவும் பேருந்தில் பயணம் செய்தவர்கள் நினைவு கூர்கின்றனர்.

ஆங்கிலேய அரசு வருமான வரி என்ற பெயரில் ஜி.டி.நாயுடுவின் சொத்தில் 96 விழுக்காடு தொகையை வரியாக கேட்டதால், 1938 ஆம் வருடம் தன்னுடைய யுனைட்டட் மோட்டார் சர்வீஸ் என்ற நிறுவனத்திலிருந்த பதினெட்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள தன்னுடைய பேருந்துகளை கோவை வட்டார போக்குவரத்து கழகத்தாரிடம் இலவசமாக ஒப்படைத்துவிட்டார்.

மோட்டார் வாகனத்தில் மட்டுமல்லாது விவசாயத்துறையிலும் பல்வேறு அறிய கண்டுபிடிப்புகளை கண்டறிந்த ஜி.டிநாயுடு தனது 80 வது வயதில் 4 1 1974 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

மிக எளிமையான அந்த விஞ்ஞானியின், அறிவியல் மாமேதையின் நினைவு நாளில் கோவையில் முதல் பஸ் ஓடியதன் 96வது ஆண்டு தினத்தை நினைவு நன்றியுடன் நினைவு கூர்வதே நாயுடுவுக்கு செலுத்தும் உணமையான மரியாதையாகும்.



ஜி.டி. நாயுடு




# உமிழ்நீர் என்னும் இயற்கை மருந்து !

சர்க்கரை நோய்க்கான எளிய,

இயற்கை மருந்து, நம்ம வாயிலேயே இருக்கு !உமிழ் நீராக இருக்கு ! சர்க்கரை

நோய்க்கும் வாயில் ஊறக்கூடிய உமிழ் நீருக்கும் என்ன சம்பந்தம் ?

உணவுடன் கலந்து செல்லும் உமிழ்நீர்தான், கணையத்தில் இன்சுலினைச் சுரக்கத் தூண்டுகிறது !

உமிழ் நீர் எனும் இயற்கை மருந்தை,

நம் முன்னோர்கள், தாங்கள் உண்ணும் உணவு வழியாகவே,அதிக அளவு எடுத்துக் கொண்டனர்

வாழ்வதற்காக உண்டனர்! உண்பதற்காக வாழ்ந்தனர் !

அதனால்தான், பொறுமையுடனும், அமைதியுடனும், பொறுப்புடனும் உணவு உண்டனர் ! அதனால்,அவர்கள் சாப்பிடும் உணவுடன் உமிழ்நீர் அதிக அளவு கலந்து, வயிற்றுக்குள் சென்றது !

கூடுதலாக உமிழ் நீரை சுரக்கச் செய்வதற்காக, ஊறுகாயைச் சிறிதளவு எடுத்துக் கொண்டனர் !

நம் முன்னோர்களுக்கு, உமிழ் நீரின் அருமை தெரிந்திருந்ததால், ஊறுகாய் என்ற உணவுப் பொருளை கண்டுபிடித்துப் பயன்படுத்தினர் !

உமிழ்நீரை அதிக அளவு எடுத்துக்கொள்வதால், கணையத்திலிருந்து இன்சுலின் சுரப்பதற்கு எந்தத் தடையும் வராது !

"தூண்டல், துலங்கல்" என்ற விதியின்படி, உமிழ் நீர் என்ற தூண்டுதலால், இன்சுலின் என்ற துலங்கல், சுரக்கப்படுகிறது ! நம் முன்னோர்கள், நாட்களைக் கணக்கிட்டு, மாதங்களைக் கணக்கிட்டு,

வேலை பார்த்தனர் !தற்காலத்தில், நாம் மணியைக் கணக்கிட்டு, நிமிடத்தைக் கணக்கிட்டு, நொடியைக் கணக்கிட்டு, வேலை பார்க்கிறோம் !

அந்த அளவிற்கு நமது வாழ்க்கையின் வேகம்

அதிகரித்துவிட்டது ! உணவு சாப்பிடும் வேகமும் அதிகரித்துவிட்டது !

வாழ்க்கைக்கான சாப்பாடு என்ற மனநிலை மாறி, சாப்பிடுவதும் ஒரு 'வேலை'தான் என்ற மனநிலைக்கு வந்துவிட்டோம் !

உணவை ரசித்து, ருசித்து,

மென்று,உமிழ் நீர் கலந்து சாப்பிடாமல்,அவசர அவசரமாக வாயில் போட்டு, லபக் லபக் என்று, விழுங்குகிறோம் !

நாம் விழுங்கும் உணவில், உமிழ் நீர் கலக்க

வாய்ப்பு இல்லாததால், நாம் உண்ணும் உணவுக்கு தேவையான இன்சுலின், கணையத்தில் சுரக்காது !

எனவே, உணவிலுள்ள குளுக்கோசு, கிளைக்கோசனாக மாறாமல், அது சர்க்கரையாகவே இரத்தத்தில் தங்கிவிடுகிறது !

நாளடைவில், சர்க்கரை நோய் என்று அழைக்கப்படும், நீரிழிவு நோயாக மாறி விடுகிறது !

சர்க்கரை நோய்க்கு மிகச்சிறந்த இயற்கை மருந்து, நம் வாயில் ஊறும் உமிழ்நீர்தான் !

எனவே, நாம் சாப்பிடும்போது, உணவை

மெதுவாக மென்று, ரசித்து, ருசித்து, சாப்பிட வேண்டும் ! அப்போது, இயற்கையாக உமிழ்நீர் சுரக்கும் !

கூடுதலாக, உணவு செரிமானமும் சிறப்பாக நடக்கும் ! ஜீரணக் கோளாறு என்ற பேச்சுக்கே இடம் இல்லை ! நோயற்ற வாழ்வு வாழலாம் !

குடிநீர், குளிர் பானம், கூழ், சூப், தேநீர் அருந்தினால் கூட, உமிழ்நீரை கலந்து, வயிற்றிற்குள் போகிறபடி, மெதுவாக ரசித்து, ருசித்து, அனுப்ப வேண்டும் !

நீரிழிவு நோய் எனும் தற்கால கொடிய நோயை, 'உமிழ்நீர்' எனும் அற்புத அமிர்த்தம்கொண்டு, அழித்து, ஒழிப்போம் !

நொறுங்கத் தின்றால், நூறு வயசு..." என்று, நம் முன்னோர்கள் சொன்னார்கள் !

## Veg / Non - Veg

எந்த வகை உணவானாலும், கூழ், தேநீர், சூப்போன்ற எந்த உணவானாலும்... பசித்த பின் சாப்பிட வேண்டும் ! ரசித்து சாப்பிட வேண்டும் ! உமிழ் நீர் சுரக்கிறபடி மென்று, ருசித்து, சாப்பிட வேண்டும்.

# சொன்னது ஒன்று! நடப்பது ஒன்று!

'வீட்டிற் கொடு மரம் வளர்ப்போம் அண்மைக் காலமாக இடம் பெறும் வாசகம். அது போல் எங்கே நடுகிறீர்கள் என்று யாரைக் கேட்பது? ஒரு பக்கம் காலை விஸ்தரிப்பிற்காக் இருக் கின்ற மரங்களை வெட்டிக் கொண்டல்லவா போகின்றனர் ஆங்காங்கே 'மரம் நடுவிழா' என்று பெயருக்கு விழா நடத்துகின்றனர். அன்று வைக்கின்ற மரக்கன்றுகளும் பராமரிக்கப்படுகின்றனவா என்பதே கேள்விக்குறி..சொல்வது ஒண்ணு, செய்வது ஒண்ணு என்பதற்கு இதுபோல் பல உதாரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

● பிளாஸ்டிக்கைத் தடை செய்ய வேண்டும் என்று ஒரு பக்கம் முழங்குகின்றனர். பிளாஸ்டிக் நச்சுத்தன்மை வாய்ந்தது; அதில் வைத்துப் புழங்கும் பொருட்களும் விஷமாகிவிடும் என்று பயமுறுத்தி வருகின்றனரே தவிர, அதன் பயன்பாடு முற்றிலுமாகக் குறைந்ததா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

பிளாஸ்டிக் கவரில் பொருள் கொடுத்தால் அபராதம் என்று சொல்கின்றனர். திருட்டுத்தனமாகப் பிளாஸ்டிக் கவர்களின்பயன்பாடு இன்னமும் இருந்து கொண்டு தான் இருக்கின்றது.

● ஆபத்து என்று கூறிவிட்டு, அந்த ஆபத்தை அனுமதிக்கலமா என்பதே நம் கேள்வி, பிளாஸ்டிக் தயாரிப்பையே விட்டுவிட முடியாதா, என்ன?பிளாஸ்டிக்கை எப்படி, முற்றிலும் ஒழிக்க முடிய வில்லையோஅதுபோல் புழக்கத்திலுள்ள இன்னொரு பொருள் சிகரெட், புகைப்பிடித்தல் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் என்றொரு பக்கம் விளம்பரம். அதிலும் அந்து சிகரெட் பெட்டியின் மீதே விளக்கம் ஜரூராக நடக்கிறது வியாபாரம். உடல் நலத்திற்குக் கேடு என அறிந்தே, அதனை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். உற்பத்தியையே விட்டுவிடமுடியாதா, என்ன?

● இன்றைய கல்வி முறை மற்றும் கல்வித்தரம் பற்றி அவசியம்சொல்லியே ஆக வேண்டும். பெற்றோர்கள் பெரிய படிப்பு படித்திருந்தால் மட்டுமே குழந்தைகளுக்கு மழலையர் படிப்பிற்கே இடம்என்று கொண்டு வந்து விட்டார்கள். இன்றைய பள்ளிக் குழந்தைகளின் மீது பாடச்சுமை திணிக்கப்படுகின்றது. என்னதான், பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள், பாடம் நடத்தினாலும், அதனை வீட்டில் வைத்து சொல்லித்தர பெற்றோர்களும் படித்திருக்க வேண்டும். என நினைப்பதன் விளைவே இது.'ஐடி' பணியில் உள்ள பெற்றோரும், தங்களுக்கு நேரமின்மையால் குழந்தைகளை டிழசனுக்கு அனுப்பி வைக்கின்றனர். 4மணி வரை பள்ளிப் படிப்பு, எட்டுஒன்பது வரை டியுசன் படிப்பு என்று எந்திரமயமாகி விட்டது அவர்கள் படிப்பு. 'மாலை முழுதும் விளையாட்டு என்று பழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா' என்று பாடிய பாரதிவரிகளுக்கு மதிப்பு இல்லாமற் போய் விட்டது. 'எங்கும் ஆன்லைன்' என்பது மழலையர் கல்வியையும் விட்டு வைக்கவில்லை. எல்.கே.ஜி, யு.கே.ஜி., அட்மிஷனே ஆன்லைனில் தான் என்றாகி விட்டது.

ஒரு காலத்தில் 'குருகுலக்கல்விமுறை' இருந்தது ,குருவிற்கான எல்லா வேலை களையும்செய்தபடியே, பாடமும் பயின்றனர், நல்ல ஒழுக்கங்களைக் குருமார்கள் கற்பித்தனர், ஆனால் இன்றோ ஒழுக்கம் கிலோ என்ன விலை? என்று கேட்கும் நிலையில் நாம். சிறுகுழந்தைகளாகிய, பள்ளி மாணவமாணவியர் இடையே கஞ்சாமற்றும் போதைப்பழக்கம், ஓரினச் சேர்க்கை என் பல பழக்கங்கள் திருட்டுத்தனமாக உலா வருகின்றன. இதனைக் கண்டிக்க ஆசிரியருக்கும், பெற்றோருக்குமே நேரமில்லை. என்ன செய்வது அந்த நிலையில் நாம்.!

● நம்மிடையே திறமைசாலிகள் இல்லமலில்லை, ஒரு காலத்தில் டாக்டர்களோ, எஜினீயர்களோ குறிப்பிட்ட அளவிலேயே இருப்பார்கள். ஆனால் இன்றோ, தடுக்கி விழுந்தால் டாக்டர்களும், என்ஜினீயார்களும்.! திறமைசாலிகள், உயர்ந்த சம்பளம் காரணமாக வெளிநாட்டை நோக்கிப் படையெடுக்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும்.

● இந்தியா ஒரு விவசாய நாடு, இங்கு செய்யாத விவசாயம் இல்லையெனலாம், இன்றைய விவசாயத்தின் முறைகேடுகள் பற்றியும் சொல்லியாக வேண்டிம். உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளால் உருவாக்கப்படும் விளைபொருட்கள் செயற்கையானவை, உடல் நலத்திற்குக் கேடு என்றனர். எரு போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்தும் விளை பொருட்கள், 'ஆர்கானிக்' உடலுக்கு நல்லது என்றனர். இன்று 'ஆர்கானிக்' என்ற ஒன்று கிடையாது என்கின்றனர். ஏனிந்த முரண்பாடு? இதனை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

- எம்.எஸ்.மூர்த்தி

ஆன்மிகம்

# சரும நோய் தீர்க்கும்

## ஸ்ரீ சந்திரசேகர சுவாமி



திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்செந்துறையில் அமைந்துள்ளது. அருள்மிகு மானேந்தியவல்லி சமேத அருள்மிகு சந்திரசேர சுவாமி திருக்கோயில்.இது ஒரு பாடல் பெற்ற ஸ்தலமாகும், பல நூற்றாண்டுகள் பாரம்பரிய சிறப்பு வாய்ந்தது.

தஞ்சை பெரிய கோவிலைக்கட்டிய ராஜராஜ சோழனின் பாட்டனார், திருச்சி உறையூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தார்.

காவிரியின் இருபுறமும் பலா மரக்காடுகள் இருந்தன. இங்கே மான்கள் கூட்டமாகத் தங்கியிருக்கும். ஒருமுறை மான் வேட்டையாடிய போது, ஒரு மான் பலாமரப் பொந்திற்குள் ஓடி ஒளிந்தது அம்பு குறிதவறி பலாமரத்தின் மீது பட்டது, அந்த இடத்தில் பலாமரப் பாலுக்குப் பதிலாக இரத்தம் கசிந்தது, அப்போது ஒரு அசரீரி கேட்டது.

பலாமரத்தடியில் சுயம்புருபமாக சிவபெருமான் உள்ளதாகவும், அந்த இடத்தில் ஒரு சிவாலயம் எழுப்புமாறும் கட்டளை பிறந்தது, சிவபெருமான் இருக்கும், இடத்தில் உயிர்வதை செய்ய வந்து விட்டோமே என்று கீழே விழுந்து வணங்கினர். இதனை ஒரு செப்புத் கட்டிலும் பதிவு செய்தனர்.


பலாமரத்தில் இருந்து செந்நீர் பெருகி, செந்நிறத்துடன் ஆற்றுப் படுகையில் தோன்றியதாலும், ஈசன் அவ்விடம் இருப்பதாக அசரீரி தோன்றியதாலும் திருச்செந்துறை என்று ஊருக்குப் பெயர் வழங்கப்பட்டது.

பௌர்ணமி தினத்தில், பராந்தக சோழருக்கு அசரீரி கேட்டதால், சுவாமிக்கு சந்திரசேகர சுவாமித என்று திருநாமம் சூட்டினர்.

பலாமரப் பொந்தில் அம்மன், மான்வடியில் ஒளிந்தால் மானேந்திய வல்லி என்ற பெயரில் அழைத்தனர். பெரிய குந்தவை நாச்சியாரால், அந்தப் பகுதியை ஆண்டு வந்த சாளுக்கிய மன்னனின்

அனுமதி பெற்று சிறைகைதிகள் உதவியுடன் யானைகள் மூலம் கருங்கல்பாறைகள் கொண்டு வந்து **617** நாட்களில் கோவில் கட்டப்பட்டு குடமுழுக்கு நடந்ததாக கல் வெட்டுகள் தெரிவிக்கின்றன. மேலும் கோவிலுக்கு **400** ஏக்கர் நிலம் எழுதி வைக்கப்பட்டதாகவும் கல்வெட்டிகளில் உள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.வேறு எங்குமே சந்திரசேகர் - மானேந்தியவல்லி என்னும் பெயர் கிடையாது என்பதே தனிச்சிறப்பு. திருஞான சம்பந்தர் பாடிய பத்து பாடல்களில், இரண்டு பாடல்கள் மட்டுமே கிடைந்துள்ளன. சிவனின் உருவம் கரடு முரடாக இருப்பதால், சந்திரனுக்கு உகந்த திங்கட்கிழமைகளில், 8 வாரம் நெய் தீபம் ஏற்றி, சிவனது அபிஷேக விபூதியை உடலில் பூசிக்கொண்டால் தீராத சரும வியாதிகள் தீரும் என நாடிஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் சதுஷ்காதேவி என்னும் ஐந்து முக தேவியும் சரபேஸ்வரர், நரசிம்மர், ஹயக்ரீவர் உருவங்களும் மிகவும் விசேஷம்.


சந்திரசேகரசுவாமி


மானேந்திய வல்லி

மார்க்கண்டேயரைக் கவர யமன் பாசம் வீச ஈசன் அவனை காலால் உதைக்க பல தலங்கள் சுற்றி இங்கு வந்து வழிபட்டு அருள் பெற்றான். லிங்கமேல் பலா முட்கள்போல், வேரிலும், கிளையிலும் பலா 20 சுளைகள்மட்டும் உண்பதிற்கில்லை.

தட்சனின் 27 பெண்களை மணந்த சந்திரன் ரோகிணியிடம் அன்பு செலுத்த தட்சன் சபிக்க சந்திரனின் கலைகள் ஒவ்வொன்றாகத் தேய்ந்துவர சிவனிடம் சரணடைந்தான். சிவன் ஆறுதல் கூறி தேய்ந்த கலைகள் மீண்டும் வளர அருள் புரிந்தார். அவனை அவன் இருந்த மூன்றாம் கலை நிலையில் தன் சிரசில் சூடிக்கொண்டார்.

இங்குள்ள சந்திரசேகரமூர்த்தம்பகைவராய் இருக்கும் இருவரை ஒன்று சேர்த்து வாழ அருள்புரிவார் என்கின்றனர். சந்திரனும், பாம்பும் பகைமை கொண்டவர்கள். இருவருக்கும் அருள் வழங்கியது போலவே பகைவர்களுக்கு அருள்கின்றார். தவயோகியாக தட்சிணாமூர்த்தி அருள்கின்றார். செங்கல் கட்டிடத்தை கற்றளியாக கொடும்பாளூர் கோமகன் திருப்பணி செய்தது குறிப்பிடத்தக்கது. சிறுகுழந்தைகளுக்கு முதன்முதலில் அன்னபிரசனம் செய்ய சிறந்த தலம் எனக் கூறப்படுகின்றது.

திருக்கோயில் சிறப்பைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஆதித்தம் பூதி என்பவர் அவர் மகனுக்கு அன்னபிராயம் செய்த நாளில் திருச்செந்துறை திருக்கோயில் இறைவனுக்கும், பிள்ளையாருக்கும் (கல்வெட்டில் ஆறாவது வரியில் கணவதியார்க்கு என்று குறிக்கப்பட்டுள்ளது) திருஅமுதுக்கும், வழிபாட்டிற்கும் நிலங்களை கொடையாக (கல்வெட்டில் இரண்டாவது வரியில் தேவதானமாக என்று குறிக்கப்பட்டுள்ளது) வழங்கியுள்ளார். நிலத்திலிருந்து பெறப்படும் நெல் எவ்வாறு பயன்பட வேண்டுமென இக்கல்வெட்டில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. சிறு காலைக்கும் உச்சிப் பொழுதுக்கும் (காலை மற்றும் உச்சிக்கால பூஜைகளுக்கு) தேவையான நெய்யமுது, தயிரமுது ஆகியவற்றிற்கும், அப்பம் செய்ய தேவையான பருப்பு, உப்பு, சர்க்கரை இவற்றிற்கும், தேவையான நெல் உரி மற்றும் நாழியளவால் குறிக்கப்பட்டுள்ளது. இன்றும் நாம் உபயோகிக்கும் ஆழாக்கு என்ற அளவையும் உரியாழாக்கு (உரி + ஆழாக்கு) என்று 3 மற்றும் 4 ம் வரிகளில் குறிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு முதன்முதலில் சோறூட்டுவது மற்றும் இதனை ஒரு விழாவாக இறைவனுக்கு அமுது படைத்து கொண்டாடுவது போன்ற பழக்கங்கள் ஆயிரமாண்டுகளுக்கும் மேலாக இச்சமுதாயத்தில் இருந்து வந்துள்ளன என்பதை இந்த முதற் பராந்தகன் காலக் கல்வெட்டு உணர்த்துகிறது.

இந்துசமய அறநிலையத்துறையால் இத்திருக்கோயில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. 2001-ம் ஆண்டு திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. விரைவில், திருப்பணிகள் நடைபெற்று குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் விருப்பமாக உள்ளது

*சி.கோ.ரகுபதி ஆத்மா*



# இயற்கையோடு வாழ்க்கை!

“காலை இஞ்சி.. கடும்பகல் சுக்கு.. மாலை கடுக்காய்.. மண்டலம் உண்டோர் கோல் இன்றி நடப்பாரே”

## இதுதானே....

என முண்டாசை சரிசெய்தபடி மீசையை முறுக்குகிறார் முத்துச்சாமி. 75 வயதானாலும் 25 வயது இளைஞனிடம் இல்லாத சுறுசுறுப்பை இவரிடம் பார்க்கலாம்.

திருப்பூர் கருவம்பாளையம் பகுதியில் உள்ள முத்துச்சாமியின் வீடு இந்தத் தலைமுறை நிச்சயம் காணவேண்டிய ஒரு அருங்காட்சியகம். சாணம் மெழுகிய திண்ணைகள், கயிற்றுக்கட்டில், பனை ஓலை விசிறி, சீமை ஓட்டு மேல்கூரை, பொன்னாங்கண்ணி, வில்வம், கத்தாழை, தூதுவளை, புதினாவுடன் கூடிய மூலிகைத் தோட்டம், தினசரி சாப்பாட்டுக்காக மாடியில் காய்கறித் தோட்டம், அதன் பக்கத்தில் அறிவை மேம்படுத்தும் பெரிய நூலகம்.. என்று இயற்கையோடு இயைந்து, இணைந்து வாழ்கிறார் முத்துச்சாமி.

அக்கம்பக்கத்தில் வசிப்பவர்கள் அவரது வாழ்க்கை முறையைப் பார்த்து வாயைப் பிளக்கிறார்கள். “எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்பதுதான் நான் வாழும் இந்த வாழ்க்கையின் உண்மை தத்துவம்.

## தமிழகத்தின் தேசிய மரம் பனை.

ஆனால், கொஞ்சம்கூட யோசிக்காம அதை அழிச்சிட்டு வர்றாங்க. செங்கல் சூளைக்காக பனை மரத்தை தூரோடு வெட்டி எடுத்துட்டே இருக்காங்க.

பனைப்பால், பனை நுங்கு, பனை ஓலை, கருப்பட்டி என வாழைக் கன்றுபோல பனையின் அனைத்து பாகங்களும் பயன்படும். பனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ஒரு குறளுக்கு 100 மரம் வீதம் ஒரு லட்சத்து 33 ஆயிரம் பனை மரங்களை திருப்பூர், காங்கயம், சென்னிமலை, கைத்தமலை, ஜல்லிப்பட்டி, செஞ்சேரிமலை, நரசிபுரம், பவானி உள்ளிட்ட பகுதிகளில் நட்டுவைத்தோம்.

ஆனாலும், பனை மரங்களை அழிப்பது நின்றபாடில்லை” – இயற்கையின் மீது தனக்குள்ள அக்கறையை வெளிப்படுத்திய முத்துச்சாமி, தன்னைப் பற்றியும் பேசினார்.

“வருஷா வருஷம் முதியோர் தடகளப் போட்டியில் எனக்குதான் முதலிடம். அந்தளவுக்கு என் மனசையும் உடம்பையும் இயற்கை உணவு காப்பாத்தி வைச்சுருக்கு.

இதுவரை எந்த நோயும் அண்டியதில்லை.

காலையில் வரகரிசி உப்புமா, கொஞ்சம் கீரை, அரை வேக்காட்டில் காய்கறிகள், மூலிகை தோசை, ராகி, கேப்பை, கம்பு, கூழ்னு எனக்குப் பிடிச்சத எடுத்துக்குவேன்.

சிறுதானியங்கள் என் உணவுல பிரதான அங்கம். தமிழரின் வாழ்க்கை முறையே அப்படி இருந்ததுதானே.

இன்றைக்கு இருப்பதுபோல பளபளக்கும் பகட்டு டப்பாக்களுக்குள் நம் முன்னோர்கள் முடங்கிப் போகவில்லையே? வீட்டில் சமையலுக்குகூட, கடைகளில் அரைத்து விற்கப்படும் எந்தவொரு பொருளையும் நாங்க பயன்படுத்துறதில்லை.

மூணு வேளையும் முழு கட்டு கட்டுற வேலையும் எனக்குப் பிடிக்காது. காலை மற்றும் பொழுதுசாயும் நேரம் என தினமும் ரெண்டு வேளைதான் சாப்பாடு.

மத்த நேரங்களில் சுக்கு கசாயம் போதும். வெளியூர் போனா ஓட்டலைத் தேடிப் போறதில்லை. அதுக்குப் பதிலா, கொஞ்சூண்டு அவல் எடுத்துட்டுப் போயிருவேன். ஒருவேளை பசியாற மூணு கைப்பிடி அவல் போதும். நான் மட்டுமல்ல..

சுப்புலட்சுமியும் அப்படித்தான்" என்று தன் மனைவியை அறிமுகப்படுத்துகிறார்.

"எந்தச் சூழலிலும் இயற்கைக்கு முரணா வாழக்கூடாதுன்னு இவரு அடிக்கடி சொல்வாரு. செல்போன் அதிகரிச்சதால சிட்டுக்குருவிகள் அழிஞ்சுட்டு இருக்கு, அதனால செல்போனை நாங்க கையால தொடுறதே இல்லை.

பெட்ரோலுக்குத்தானே இந்த உலகத்துல பெரும் யுத்தம் நடக்குது. பெட்ரோல் வண்டிகளோட கரும் புகை நம்மைச் சுற்றி நச்சுக்களை பரப்பி இயற்கையை அழிச்சுக்கிட்டே இருக்கு.

அதனால, பெட்ரோல் பயன்படுத்தவே கூடாதுன்னு வைராக்கியம் வச்சுக்கிட்டு, இப்ப வரைக்கும் சைக்கிள்தான் ஓட்டுறாரு.

அளவுக்கு அதிகமாக தண்ணீரை வீணடிக்கிறதும் நாம பூமிக்கு செய்யுற துரோகம்னு சொல்வாரு. வீட்டுல மின்சார வசதிகூட ரொம்ப நாளா இல்லை. இப்பத்தான் சோலார் பேனல் மூலமா ஒரே ஒரு லைட்டுக்கும், காத்தாடிக்கும் தேவையான அளவுக்கு இயற்கை மின்சாரம் உபயோகிக்கிறோம்


. இவரு வெளியூர்களுக்கு போனாக்கூட கீழாநெல்லி, துளசி மாதிரியான கன்றுகளைத்தான் வாங்கிட்டு வருவாரு. நாங்க, முடிஞ்ச வரைக்கும் இயற்கையை சீரழிக்காம வாழ்ந்துட்டு இருக்கோம். அதனால, எங்க வாழ்க்கையும் ரொம்ப ஆரோக்கியமாக இருக்கு.

ஆனா, தங்களையும் அறியாமல் இயற்கையை அழிச்சிட்டு இருக்கிற சனங்க, 'எப்படி உங்களால இந்தக் காலத்துலயும் இப்படி எல்லாம் வாழமுடியுது.

இந்தக் காலத்துக்கு இதெல்லாம் சரிப்பட்டு வருமா?'ன்னு கேள்வி கேக்குறப்ப சிரிக்கிறதா வேதனைப்படுறதான்னு தெரியல" கணவர் கருத்திலிருந்து கடுகளவும் மாறாமல் பேசினார் சுப்புலட்சுமி.

'அரசு விழாக்களில் புலால் உணவு பயன்படுத்த தடைவிதிக்க வேண்டும்' என முத்துச்சாமி எழுதிய கோரிக்கை மனுவை ஏற்றுத்தான், 'இனி, அரசு விழாக்களில் சைவ உணவு மட்டுமே பரிமாறப்படும்'என்ற உத்தரவை தமிழக அரசு பிறப்பித்ததாம்.

பெருமையுடன் சொல்கிறார் முத்துச்சாமி. இயற்கையோடு இணைந்த இவர்களது வாழ்க்கைமுறை பற்றி கேள்விப்பட்டு, இந்தக் காலத்து இளைஞர்கள் பலரும் இவர்களது வீட்டுக்கு வந்து விசாரித்துவிட்டுப் போகிறார்களாம்.





# கிராமத்து சமையல்

தேங்காய் தண்ணீரை வீணாக்காமல் ரசத்தில் சேர்த்தால் ரசம் மிகவும் ருசியாக இருக்கும்

எந்த கறை ஆடையில் பட்டாலும் சிறிது வினிகர் போட்டு துவைத்தால் கறை இருந்த இடம் தெரியாது.

ஆப்ப சட்டி பணியார சட்டிகளில் எப்பொழுதும் எண்ணெய் தடவியே வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆப்பம் பணியாரம் செய்யும்போது எளிதாக செய்யலாம்.

கொதிக்கவைத்து ஆறிய நீரில் சீரகப் பொடியை போட்டு 12 மணி நேரம்ஆகி குடித்தால் இரத்த கொதிப்பு சீராகும்.

மண்பாத்திரம் புதிதாக வாங்கினால் அதில் சிறிது எண்ணெய் தடவி அடுப்பில் சற்று நேரம் சூடேற்றி பின் கழுவினால் மண்வாசனையும் வராது விரிசலும் விடாது.

தக்காளி சட்னி செய்யும் போது அதில் சிறிது எள்ளை வறுத்து பொடி செய்து போட்டால் ருசி அதிகமாக இருக்கும். தயாரிக்கும் போது அதில் சிறிது எலுமிச்சை சாற்றை கலந்து குடித்தால் ருசி அதிகமாக இருக்கும்.

பொரித்த அப்பளம் மீதமாகிவிட்டால் அதை பாலிதீன் பையில் நன்றாக சுற்றி ஃபிரிஜ்ஜில் வைத்துவிட்டால் ஒரு வாரம் ஆனாலும் மொறு மொறுப்பு மாறாமல் இருக்கும்.

வாஷ் பேசினில் இரண்டு அல்லது மூன்று ரசகற்பூரம் போட்டு வைத்தால் எந்தவித துர்நாற்றமும் வராது.

அடைக்க அரைக்கும் போது அரிசி பருப்புடன் இரண்டு வேக வைத்த உருளை கிழங்கு போட்டு அரைத்தால் ருசியாக இருக்கும்.

இளம் காலை வெயிலிலும் மாலை வெயிலிலும் பிறந்தகுழந்தையை சிறிது நேரம் படுக்க வைத்தால் அந்த குழந்தைக்கு வைட்டமீன் "ஞி" யும் கோடை காலத்தில் தாகம் எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் அவ்வப்போது தண்ணீர் குடிக்க வேண்டும் இது சரும வறட்சியை நீக்குவதோடு சிறுநீரகம் மலக்குடல் சிறப்பாக செயல்பட உதவும்.

பழைய டூத்பிரஷ்களை தூக்கி எறிந்து விடாதீர்கள் மரக்கதவு கிரில் கேட் பொன்றவற்றின் இடுக்குகளில் உள்ள தூசிகளை அகற்ற இதைவிட சிறந்த பொருள் வேறு எதுவும் கிடையாது.

மீன்தொட்டியில் உள்ள பழைய தண்ணீரை மாற்றும்போது அதை கீழே கொட்டி விடாமல் செடிகளுக்கு ஊற்றினால் செடிகள் செழித்து வளரும்.

சாப்பாட்டு மேஜையை துடைக்கும் துணியில் சிறிதளவு உப்போ கற்பூரமோ வைத்து துடைத்தால் ஈ மற்றும் பூச்சிகள் உட்காராது.

பழைய சென்ட் பாட்டில்களில் சிறிது தண்ணீர் விட்டு நன்கு குலுக்கி வைத்து கொண்டால் கைக்குட்டைகளை மணக்க செய்யலாம்.

உங்கள் வீட்டு .ஃப்ரிஜ்ஜிலிருந்து துர்வாடை வந்தால் ஏதாவது ஒரு எசன்ஸை ஒரு துண்டு பஞ்சில் தோய்த்து ஃப்ரீஸருக்குள்ளும் ஃப்ரிஜ்ஜின் உள் மூலையிலும் போட்டு விடுங்கள். இனி ஃப்ரிஜ்ஜை திறந்தால் ஒரே கமகமதான்.

ஊதுவத்தி பாக்கெட்டுகள் காலியானதும் அவற்றை துணிவைக்கும் பீரோவில் போட்டுவைத்தால் பீரோவை திறக்கும் போது கமகமக்கும்.

துணிகளை துவைத்து முடித்தபின் கடைசியாக அலசும்போது அந்த தண்ணீரில் சில சொட்டு கிளிசரின் கலந்து விட்டால் துணிகள் சுருக்கம் இல்லாமல் இருக்கும்.

நைலான் கயிரை வாங்கியவுடன்சோப்புநீரில் நனைத்து உபயோகித்தால் நீண்ட நாள் உழைக்கும்.

தரையில் எண்ணெய் கொட்டி விட்டால் அதன்மிது கோலப்பொடியை தூவிவிட்டு துடைத்தால் எண்ணெய் பசை நீங்கி விடும்.

ஏலக்காயை பொடித்து அதன்விதைகளை உபயோகத்திற்கு எடுத்தபிறகு தோலை எறிந்து விடாமல் குடிக்கும் நீரில் போட்டு வைத்தால் தண்ணீர் மிகுந்த ருசியாக இருக்கும்.

நிறம் மங்கிய வெள்ளை துணிகளை வினிகர் கலந்த நீரில் ஊற வைத்து துவைத்தால் துணி பளிச்சென்று இருக்கும்.


மிக்சியை கழுவும்போது டூத்பிரஸ்ஸில் சிறிது டூத் பேஸ்ட் வைத்து தேய்த்துக் கழுவினால் பளீரென்று இருக்கும்.

பூண்டு உரிப்பதற்கு முன் தண்ணீரில் ஐந்து நிமிடம் போட்டு விட்டு உரித்தால் தோல் கைகளில் ஒட்டாது.

நெய் காய்ச்சிய பாத்திரத்தில் ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து அதை சாம்பாரில் கலந்து விடுங்கள். நெய் மணம் கமழும் சாம்பார் ரெடி.

தேங்காயை ஃபிரிஜில் வைத்து ஜில்லென்று எடுத்து உடைத்தால் சுலபமாக உடைத்து விடலாம்.

## 9x9 Crossword #269



**Across**

1. Cook on gridiron
4. Work with shovel
6. Belonging to us
7. Repeated another time
8. Small insect
9. 10 cent coin
11. Frozen precipitation
14. Food tin
15. Grayish green
17. Hooting bird
18. Sticky black substance
19. A lollipop

**Down**

1. Protect
2. Northern Ireland army
3. Not short
4. Empty liquid from container
5. Acquire
10. Not major
12. Fully of weeds
13. Tootsie ____
14. Feline
16. Sick



**S.JANAKI**
**STD X**
**GOOD SHEPHERED**
**M.H.S, School Chennai**

**Send Answer, And Get one year subscription - Editor MITRA TIME'S**



# நாட்டுப்புறக் கலைஞர்களின் மகிழ்ச்சியும், எரிச்சலும்!

ஒரு நாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் அச்சமூகத்தினைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுது போக்கிற்காக மட்டுமின்றித் தகவல் ஊடகமாகவும், கலாச்சாரப் பலகனியாகவும் திகழ்கின்றது. கலை என்பது மன உணர்வுகளின் வெளிப்பாடு. குறிப்பாக நாட்டுப்புறக் கலைகள் நமது மண்ணோடு, நம்மோடு தொடர்புடையவை. நமது பாரம்பரியத்தையும் அடி ஆழத்து வேர்களையும் பிரதிபலிப்பவை. கலை, சமூக வளர்ச்சிக்கும், மன எழுச்சிக்கும் சிறந்த கருவி.

நமது முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், ஆகியவற்றை நாட்டுப்புறக் கலைகள் மூலம் அறியமுடிகிறது. இக்கலைகளே சமுதாயத்தின் ஆவணமாகத் திகழ்கின்றன. இக்கிராமியக் கலைகளே, தகவல் பரப்பும் ஊடகமாகவும் பழக்க வழக்கப் பண்பாட்டுப் பெட்டகமாகவும் திகழ்ந்துள்ளன.

இந்திய நாட்டுப்புறக் கலைகளில் தமிழக நாட்டுப்புறக் கலைகள் பல்வேறு வகைகளில் சிறப்பும் தனித்தன்மையும் கொண்டவை. இவைகளை நிகழ்த்துக் கலைகள் (Preforming Arts) நிகழ்த்தாத கலைகள் (Non-Performing Arts) பொருட்கலை (னீணீterial Arts) என நாட்டுப்புறவியல் வல்லுனர்கள் வகைப்படுத்தியுள்ளனர்.

**பொதுவாக தமிழக நாட்டுப்புற கலைகள்:**

1. ஒயிலாட்டம் 2. ஆலியாட்டம் 3. கோலாட்டம் 4. கரகாட்டம் 5. காவடி ஆட்டம் 6. கும்மி 7. வில்லுப்பாட்டு 8. தெருக் கூத்து 9. பாவைக் கூத்து (பொம்மலாட்டம்) 10. கனியான் ஆட்டம், 11. வர்மம் 12. சிலம்பாட்டம். 13. களரி 14. தேவராட்டம் 15. சக்கையாட்டம் 16. பொய்க்கால் குதிரை ஆட்டம் 17. மயிலாட்டம் 18. உறியடி விளையாட்டு (கண்ணன் விளையாட்டு) 19. தப்பாட்டம் 20. உக்கடிப்பாட்டு 21. இலாவணி 22. கைச்சிலம்பாட்டம் 23. குறவன் குறத்தியாட்டம் 24. துடும்பாட்டம் 25. புலி ஆட்டம் 26. பொம்மைக் கலைகள் 27. மண்பாண்டக் கலை 28. கோலக் கலை

இதுபோன்று ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான கலைகள் உள்ளன. இந்தக்கலைகள் வெளியே தெரியாமல் உள்ளன. மேலும் நாடகம், வீதி நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், பரதநாட்டியம், இசைச் சிற்பம் போன்ற பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

நாட்டுப்புறக் கலைகளை ஊக்குவிக்க வேண்டும் என்பது ஒவ்வொரு கலைஞரின் விருப்பமாக உள்ளது. கலைஞர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்குவது போன்ற விஷயம் இந்த ஆண்டு நடந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் குடியரசுதின நாளில் மத்திய அரசால் பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன.

பத்மபூஷண், பத்மஸ்ரீ விருதுகளே அவை. இந்த ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருது நாட்டுப்புறப்பாடகி விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்டது.



விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன் 1946ம் ஆண்டு ஜனவரி 27 ல் பிறந்தவர். இவர் ஒரு தமிழ்நாட்டு நாட்டுப்புறவியலாளர், கிராமிய இசைக் கலைஞர் மற்றும் பேராசிரியர் ஆவார். தமிழ்நாட்டுப்புறப் பாடல்களை உயிர்ப்பிக்கும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். விஜயலட்சுமி பிறந்த ஊர் இராஜபாளையம் அருகில் உள்ள சின்னசுரைக்காயமப்பட்டி ஆகும். தந்தை பொன்னுசாமி, தாய் மூக்கம்மாள்; எம்.ஏ. முனைவர் பட்டப்படிப்பு படித்துள்ளார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் கலை வரலாறு, அழகியல் நுண்கலைத் துறையின் நாட்டுப்புற கலை மையத்தின் பேராசிரியையாகப் பணிபுரிந்தார். இவரது கணவர் முனைவர் நவநீதகிருஷ்ணனும் இதே துறையில் பேராசிரியர்.

தமிழக அரசு இவரது பணிகளைப் பாராட்டும்விதமாகக்

கலைமாமணி விருது அளித்துள்ளது. இவரது பணிகளைப் பாராட்டி இந்திய அரசு 2018 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருதை அளித்துள்ளது. ஒருபுறம்

விஜயலட்சுமி நவநீத கிருஷணன் விருது கிடைத்த மகிழ்ச்சியில் இருக்க மறுபுறம் இன்னொரு நாட்டுப்புறப் பாடகரான புஷ்பவனம் குப்புசாமி வருத்தத்தில் இருக்கிறார்.

தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு எந்தவித பதவியும் கிடைக்காது என்று கிராமிய பாடகா புஷ்பவனம் குப்புசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி நியமனத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக நாட்டுப்புற பாடகர் புஷ்பவனம் குப்புசாமி குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கான அழைப்பாணையை அரசு வெளியிட்டிருந்தது. அதன்படி குறித்த காலத்தில் நான் விண்ணப்பித்திருந்தேன். விண்ணப்ப காலம் முடிவடையும் வரை 13 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. அதன்படி நான்தான் தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் சட்டத்திற்கு மாறாக தேவையின்றி விண்ணப்பிப்பதற்கான காலம் நீட்டிக்கப்பட்டது. அந்த நேரத்தில் பிரமிளா குருமூர்த்தியை அந்த பதவிக்கு விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி அவர் விண்ணப்பிக்கவே அவருக்கு துணைவேந்தாபதவி வழங்கப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

# மாணவிக்கு மரியாதை தந்த மாவட்ட ஆட்சியர்

செய்யார் சிப்காட் லோட்டஸ் நிறுவனம் சார்பில் கல்வி துறைக்கு பல நலதிட்டங்கள் மாவட்ட ஆட்சியர் திரு.கந்தசாமி அவர்களது தலைமையில் வழங்கப்பட்டது.

அந்த விழாவில் தான் இப்படி ஒரு நிகழ்வு நடந்திருக்கிறது.விழாவில் செய்யார் அரசு மகளிர் மேனிலைப் பள்ளி 11ஆம் வகுப்பு மாணவி மோனிஷா 10ஆம் வகுப்பில் 491 மதிப்பெண் பெற்றதை பாராட்டி கல்வி உதவி தொகை மாவட்ட ஆட்சியர் மூலம் மாணவிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அப்போது மாணவி மோனிஷா அந்த ஆட்சியரிடம், "இன்று உங்கள் கையால் பரிசு வாங்கும் நான்... படித்து உங்களை போல மாவட்ட ஆட்சியர் ஆக போகிறேன். ஆசிர்வதியுங்கள்" என்று கேட்க... உடனே ஆட்சியர் "வாழ்த்துக்கள் மோனிஷா! ஒரு நிமிடம் என்னுடன் வா!" என்று அழைத்துச் சென்று தன்னுடைய கார் கதவைத் திறந்து, "என் காரில் என் இருக்கையில் உட்கார்" என கூறி யாரும் எதிர்பாராத நிலையில் அந்த மாணவியை சற்று நேரம் ஆட்சியரின் சைரன் பொருத்திய அரசு காரில் தன் இருக்கையில் அமர வைத்ததுடன், அதன் அருகே தான் கைகட்டி நின்று கொண்டு அந்த மாணவியுடன் விழாவினரை புகைப்படம் எடுக்கவும் சொன்னார்.

பின்னர் அந்த மாணவியிடம், "இந்த புகைப்படத்தைச் சும்மா எடுக்கவில்லை. இதை நீ பார்க்கும் போதெல்லாம் மாவட்ட ஆட்சியர் ஆக வேண்டும் என்ற உத்வேகம் உன்னுள் இருந்து கொண்டே இருக்கும். நானும் உன்னை போல்தான். ஒரு அரசு பள்ளியில் படித்துத்தான் மாவட்ட ஆட்சியராக உயர்ந்தேன். நீயும் ஒருநாள் அப்படி வர எனது மனமார்ந்த ஆசீர்வாதங்கள்" என்று வாழ்த்தினார். இந்த நிகழ்வு அங்கிருந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுடன் மாணவர்களுக்கு மிகுந்த ஊக்கத்தை அளித்தது.

ஒரு மாணவியிடம் மிகுந்த பெருந்தன்மையுடனும் ஊக்குவிக்கும் முறையிலும் நடந்து கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மனம் நிறைந்த பாராட்டுகள் .. வாழ்த்துக்கள்.....





# சின்னத்திரையில் தொழிலதிபர்கள்!



அண்மைக்காலமாக வர்த்தக நிறுவனங்கள் நடத்திவரும் பிரபல தொழிலதிபர்கள் தங்களது நிறுவன விளம்பரங்களில் தாங்களே தோன்றிக் கலக்கி வருகின்றனர்.

விளம்பரங்கள் என்றாலே ஒரு நடிகரோ, நடிகையோ தோன்றினால் தான் அது பொதுமக்கள் மனதில் நன்கு இடம்பெறும் என்று ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இன்று அந்த நிலை படிப்படியாக மாறி வருகின்றது.

நிறுவன உரிமையாளர்களே, தன்னம் பிக்கையுடன் தங்களது நிறுவன விளம்பரப்படங்களில் தோன்றி, இந்தக்கூற்றைத் தவறென்று நிரூபித்து வருகின்றார்கள்.

அந்தவகையில் முதலாவதாக, மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்குபவர், வசந்த் அன் கோ அதிபர் எச்.வசந்தகுமார். தானே ஒரு சேனலின் நிர்வாக இயக்குனர் என்பதால் அவருக்கான வாய்ப்பை அவரே ஏற்படுத்திக்கொண்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

உலகத்தரம் வாய்ந்த வீட்டுபயோகப் பொருட்கள் மற்றும் அதன் தரத்திற்குத் தான் கியாரண்டி தருவதாக அமைந்த விளம்பரப்படமே அது. ஒருசில விநாடிகளே இடம் பெற்றாலும், இந்த விளம்பத்தினைப் பார்ப்பவர்களுக்கு, நிறுவன உரிமையாளரே தங்களுடன் பேசியது, அவரது தன்னம்பிக்கையைப் படம் பிடித்துக் காட்டியது போலவே அமைந்தது.

அதுமட்டுமல்ல, தனது நிறுவன முத்திரையிலும் தனது படத்தை இடம் பெறச் செய்து முத்திரை பதித்து விட்டார் எனலாம். இந்தத் துணிச்சல் மற்றவர்களுக்கும் ஒரு பாடமாக அமைந்தது என்று கூடச் சொல்லலாம்.

இதே போன்று தமது நிறுவனம் பற்றிய விளம்பரங்களில் அண்மைக்காலமாக இடம் பெற்று வருபவர் வெற்றி வீட்டுபயோகப் பொருட்கள் நிறுவன அதிபர் பி.ஜெகதீஷ் உள்ளூர் சேனல்களில் அதிகம் இடம்பெறுவதோடு, தனது நிறுவன முத்திரையிலும் இடம் பெறச் செய்யும் தைரியத்தைப் பாராட்டலாம்.



வீட்டுபயோகப் பொருட்களை அடுத்து பெண்களின் மனங்கவர்ந்த ஒரு பொருள், சமையல் வேலைகளை எறிதாக்கும் மசாலாக்கள் தான். அந்த வகையில் பெண்களை மனதில் இடம்பெறும் மசாலா எனில் அது 'ஆச்சி மசாலா' எனலாம். ஆச்சி மசாலாவின் உரிமையாளர் ஐசக் தமது நிறுவன விளம்பரங்களில் தோன்றி வருவது குறிப்பிடத்தக்கது.

எந்தவொரு நிறுவனத்தின் விளம்பரமாகட்டும், அவை வீட்டின் குடும்பத் தலைவிகளை முன் நிறுத்தியே எடுக்கப் படுகின்றன. அதனாலேயே வெற்றியும் பெற்று விடுகின்றன. அப்படி வெற்றி பெற்ற நிறுவன விளம்பரங்களே, வசந்த் அன் கோ, வெற்றி ஹோம் அப்ளையன்ஸ் மற்றும் ஆச்சி மசாலா விளம்பரங்கள்.

அடுத்து பெண்கள் மனதில் இடம் பிடிக்கும் விஷயங்கள்: ஆடை மற்றும் ஆபரணங்கள். அதற்கான விளம்பரங்கள் எப்படி இருக்க வேண்டும்? ஒரு சேலை வாங்கினால் இரண்டு சேலைகள் இலவசம் என்று யாரோ கூறுவதை விட அந்த நிறுவன உரிமையாளரே தோன்றிக் கூறினால், பெண்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விடும் அல்லவா? அப்படியொரு விளம்பரத்தில் தோன்றுபவர் எஸ்.எம்.சில்க்ஸ் நிறுவன உரிமையாளர் எஸ்.மனோகரன் இவரும் அண்மைக் காலமாகப் பிரபலமாகி வருபவர்.

இதேபோல இடையில் சிலகாலம் ரியல் எஸ்டேட் அதிபர்கள் சிலரும், தங்களது நிறுவன விளம்பரப் படங்களில் தோன்றினார்கள். ரியல் எஸ்டேட் தொழில் இன்று இறங்கு முகமாக இருப்பதால் அத்தகைய விளம்பரங்கள் குறைந்து விட்டன என்பதால் அதனை விட்டு விடுவோம்.

ஆடை விளம்பரங்களில் பட்டுச்சேலை விளம்பரத்தை அடுத்துப் பேசப்படுபவை பாடி,







சரவணா ஸ்டோர்ஸ் விளம்பரப் படங்கள். அதன் உரிமையாளர் சரவணா அருள், அனேகமாக எல்லா முன்னணி நடிகைகளுடனும் தமது நிறுவன விளம்பரப் படங்களில் தோன்றிக் கலக்கி வருகின்றார்.

தமிழக அரசின் சின்னமான ராஜகோபுரம் அமைந்த ஊரான ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்து தமது வர்த்தகம் தொடங்கி வளர்ந்த நிறுவனம் போத்தீஸ். பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட நிறுவனம் என்று கூடச் சொல்லலாம். மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி வரும் போத்தீஸ் நிறுவன நிர்வாக இயக்குனர் ரமேஷ், தமது நிறுவன விளம்பரங்களில் பத்மஸ்ரீ கமலஹாசனுடன் தோன்றி இருக்கின்றார்.



பெண்களுக்கு விருப்பமா னவைகளில் கவரிங் நகைகளும் அடங்கும். கவரிங் நகை உரிமையாளர்களும் தங்களது நிறுவன விளம்பரப் படங்களில் தோன்றியுள்ளனர். ராசிக்கல் மோதிர விற்பனையாளர்களும் இதில் அடங்குவர் என்றாலும், தங்கவைர நகை விற்பனையில் முன்னணி இடம் வகிக்கும் லலிதா ஜுவெல்லரியின் நிர்வாக இயக்குனர் கிரண்குமார் இந்த வகையில் அதிகம் தோன்றிக் கலக்கி வருகின்றார். சின்னத்திரை விளம்பரப் படங்கள் மட்டுமல்ல, தினசரி, வார, மாத இதழ்களிலும் தங்களது நிறுவன விளம்பரங்களில் இடம் பிடித்து வரும் தொழிலதிபர்களின் துணிச்சலை அவசியம் பாராட்டியே ஆகவேண்டும்.



விளம்பரம் வரும் போது சேனலை மாற்றி விடும் பெண்கள் கூட, உரிமையாளரே தோன்றும் விளம்பரங்களை ரசிக்கத் துவங்கி விட்டனர். இதனால் தொழிலதிபர்களுக்கு ரொம்பவே ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இதுவரை விளம்பரப் படங்களில் நடிக்காதவர்களுக்கும் கூட இப்போது ஏன் தங்களது நிறுவன விளம்பரப் படங்களில் வரக்கூடாதென்ற சிந்தனையும் பிறந்திருக்கின்றது. இனி எல்லா நிறுவன உரிமையாளர்களும் தங்களது நிறுவன விளம்பரங்களில் இடம்பெறப் போவது உறுதி.தன்னம்பிக்கையுடன் தங்களது நிறுவன விளம்பரங்களில் தோன்றி வரும் தொழிலதிபர்களை 'மித்ரா டைம்ஸ்' பாராட்டுகின்றது.

-கவிஞர் மணிபாரதி



# மாங்கல்யம் தந்துனானே

இன்றைய திருமணச்சூழலை விளக்கும் பதிவு அவசியம் படிக்கவும்.

சென்னையில் ஒரு மேரேஜ் மேட்சிங் சென்டர் நடத்தி வரும் நண்பரிடம் அறிந்த செய்தி..

இவரதுமேரேஜ் சென்ட்டரில் இதை ஆரம்பித்த 14 வருடங்களாக பெற்றோர்களை நேராக வரச்செய்து பதிவு செய்யும் முறையை ரொம்பவும் ஸ்ட்ரிக்டாக வைத்திருக்கிறேன்.

சமயங்களில் பெண், பையன்களையும் நேராக ஆபீஸிற்கு வரச் சொல்லி பேசிப்பார்ப்பேன்.

பெண்கள், பையன்களுக்கு அன்றைக்கிருந்த மனநிலைக்கும், தற்போது இருக்கும் மனநிலைக்கும்தான் எத்தனை வேறுபாடுகள் தெரியுமா?

உதாரணமாக சமீபத்தில் தன் பெண்ணுக்கு ரிஜிஸ்டர் செய்ய வந்த பெண்ணின் தாயார் சொன்னது இது...

"போன மாசம் எங்க பெண்ணுக்கு ஒரு இடம் பார்த்து நிச்சயம் பண்ணினோம். நாலு மாசம் கழிச்சு கல்யாண தேதி குறிச்சிருந்தோம்.

ஃபோன்லே பேசிக்கிட்டதிலே அந்தப் பையன் பேச்சு எங்க பொண்ணுக்கு பிடிக்காம போச்சு. இந்தக் கல்யாணமே வேண்டாம்னுட்டா..

நாங்களும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் முடியாமத்தான் மறுபடி ரிஜிஸ்டர் செய்ய வந்தோம்" என்றார்கள் அந்தப் பெற்றோர்.

"அந்தப் பையன் அப்படி என்னதான் பேசினாராம்!"

வேறொண்ணுமில்லை வீட்டிலே 'குக்' இருக்கான்னு எங்க பொண்ணு கேட்டிருக்கா.

அதுக்கு அந்தப் பையன் 'குக் இருக்கு. ஆனா அவ லீவு போட்டா நீ ஏதாவது செய்யறாப்லே இருக்கும்'னு சொல்லி இருக்கான்.

அது எங்க பொண்ணுக்குப் பிடிக்கலே. 'குக் லீவு போட்டா எங்க அம்மா பார்த்துக்குவாங்க'ன்னு சொல்ல வேண்டியதுதானே,

நான் செய்யணும்னு ஏன் எதிர்பார்க்கறான்? இன்ன கம்பெனியிலே வேலை பார்த்து இவ்வளவு ஆயிரம் சம்பாதிக்கிறேன்.

எங்கிட்டேயே இவ்வளவு(!) பேசறான். சமைக்கணும், காஃபி போடணும்னா பேசாம கிராமத்திலே போய் படிக்காத பெண்ணைப் பார்க்க வேண்டியதுதானே'ன்னு கேட்கறா.

அவ சொல்றது எங்களுக்கும் நியாயமா(!) படுது" என்று தன் பெண்ணின் மனநிலை தெரிந்தும் விட்டுக் கொடுக்காமல் பேசினார் அந்த அம்மா!...

அடுத்து ஃபைல் பார்க்க வந்த பெண்ணுக்கு வயது 32 இருக்கும். "நீங்க கொடுத்த அந்த ஜாதகம் பொருந்தி வந்ததுன்னு அப்பா, அந்தப் பையனோட செல் நம்பர் கொடுத்தார்.

பேசிப்பார்த்தேன். ஆனா சரிப்பட்டு வரமாட்டான்னு தோணுது. (மாட்டார் என்பதெல்லாம் இப்போது இல்லை)

நேத்து நான் மூவி போனேன்னு அவன்கிட்டே சொன்னேன். 'யார்கூட போனே?'ன்னு கேட்டான்.

இந்த மாதிரி கேட்கக்கூடாதுங்கிற மேனர்ஸ் கூடத் தெரியலே! ஐ வாண்ட் மை ஸ்பேஸ்.

எனக்கு ரொம்ப ப்ராட் மைண்டட் பையன்தான் மேடம் ஒத்து வருவான்!" என்று வேகமாகப் பேசினாள் அந்தப் பெண். இது மட்டுமல்ல... இதுபோல் எத்தனையோ விதமான டயலாக்குகளை நான் கேட்டு வருகிறேன். "எனக்கு லைஃப்லேயே பிடிக்காத வார்த்தை காம்ப்ரமைஸ். நான் எதுக்காக காம்ப்ரமைஸ் பண்ணிக்கணும். அப்படி ஒரு லைஃப் எனக்குத் தேவையே இல்லை" என்றாள் ஒரு பெண்.

அவளும் 30 வயதை நெருங்குகிறாள்....

ஒரு பெற்றோரே வந்து சொன்ன விஷயம் இது.... "எங்க பொண்ணு அட்ஜஸ்ட்டபிள் டைப் இல்லே. அதை இப்பவே சொல்லிடறோம். அதனால பேரண்ட்ஸ் இல்லாத இடமா ஏதாவது இருக்கான்னு பாருங்க.... அல்லது வெளியூரிலே குடும்பம் இருந்து பையன் மட்டும் இங்கே வேலைபார்க்கற மாதிரி பையன் இருக்கா?" என்றார்கள்...

இன்னொரு பெற்றோர் ரொம்பத் தெளிவாகச் சொன்னார்கள்... "எங்க பொண்ணு சமைப்பாள்னு எதிர்பார்க்க வேண்டாம். அவளுக்கு காஃபி கூட கலக்கத் தெரியாது." இதைச் சொல்லிடுங்க முதல்ல! என்றார்கள். "எங்க பொண்ணு மூட் வந்தா நல்லாவே குக் பண்ணுவா. அவளுக்கு சமைக்கத் தெரியும். ஆனா சமைக்கப் பிடிக்காது" என்று சொல்லும் பெற்றோர்...

"எங்க பொண்ணு ரொம்பவே இன்டிபெண்டண்ட். அவளை யாராவது ஏதாவது கேள்வி கேட்டாலே பிடிக்காது" என்று சொல்லும் பெற்றோர்.

"எங்க பொண்ணுக்கு கடவுள் நம்பிக்கை சுத்தமா கிடையாது. இதை பையன் வீட்டிலே சொல்லிடுங்க.

அவங்க விளக்கு... கிளக்கு ஏத்தச் சொல்லப் போறாங்க. அப்புறம் 'மூட் அவுட்' ஆயிடுவா" என்று தகவல் தரும் பெற்றோர்...

இதையெல்லாம் பார்க்கும்போது திருமணத்தைப் பொறுத்தவரை இன்றைய இளம் பெண்களின்

சிந்தனை எவ்வளவு மாறிப்போயிருக்கிறது! என்று புரிந்து கொள்ள முடிகிறது.

வரனுக்காக ரிஜிஸ்டர் செய்துவிட்டுப் போனால்கூட, பையன் வீட்டினர்தான் திரும்ப போன் அடித்துக் கூப்பிட்டு 'வரன் ஏதாவது வந்திருக்கா? என்று பொறுப்பாக கேட்கிறார்கள்.

பெண் வீட்டினருக்கு நானே போன் போட்டு பேசினால்கூட... பொண்ணு ஃப்ரைடேதான் வருவா... சண்டேதான் பேசணும்... சும்மா பேசினா மூட் அவுட் ஆயிடுவா... அப்புறம் இந்த வீக் எண்டே வேஸ்டா போயிடும் என்பார்கள். இன்னும் சிலர் "நீங்களே என் பொண்ணுகிட்டே பேசி அவ மைண்ட்ல என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்குங்களேன்...!" என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

இன்று திருமணம் குறித்த பெண்களின் எதிர்பார்ப்பு டோட்டலாக மாறிவிட்டது...

'இவர்தான் இனி நம் வாழ்க்கை... என் சந்தோஷமோ துக்கமோ இவர்கூடத்தான்!...' என்று தன் வருங்காலத் துணையை தன் 'பாதுகாப்பாக' நினைக்கும் மனோபாவம் முற்றிலுமாகப் போய்விட்டது.

"இன்று லைஃப்ல எனக்குன்னு நான் ஒரு செக்யூரிட்டி ஏற்படுத்திட்டுதான் கல்யாணத்துக்கு ஓ.கே. சொல்வேன்!" என்று சொல்கிறார்கள் பெண்கள். பெரும்பாலான பெண்கள் திருமணத்தைத் தள்ளிப்போடச் சொல்லும் காரணமே, இந்த 'செக்யூரிடி'தான்.

"ஒரு ஃப்ளாட் புக் பண்ணிட்டேன்... அதுக்கான கமிட்மெண்ட்ஸ் கொஞ்சம் இருக்கு... என்ன இருந்தாலும் எனக்குன்னு ஒரு செக்யூரிடி வேணும்!..." என்கிறார்கள்.

தவிர இப்போது பல பெண்கள் வேலை, புராஜெக்ட் என்று வெளியூர், வெளிநாடுகளுக்கு போய்விட்டு வருவது சகஜமாகி விட்டது.



அங்குள்ள வாழ்க்கை, வசதி, சுதந்திர மனப்பான்மை இவற்றை அப்படியே பிடித்துக்கொண்டு நம் கலாச்சாரத்திலும் அதை அப்படியே எதிர்பார்க்கிறார்கள்...

தன்னை யாரும் பேச்சில்கூட கட்டுப்படுத்தக்கூடாது என்றும் நினைக்கிறார்கள். உதாரணமாக சினிமாவுக்கு யாரோட போனே? என்று கேட்ட பையனை நிராகரித்த பெண்!...சொல்லப் போனால் இப்போதெல்லாம் பெண்ணைப் பெற்ற (ஒரு சில) பெற்றோரின் மனப்பான்மைகூட மாறி விட்டது... 'ஐயோ... பொண்ணுக்கு இருபத்தி ஐந்தாச்சே... கல்யாணம் பண்ணிக் கொடுக்கணுமே!' என்று பெற்றோர் கவலைப்பட்ட காலம் போய், இப்போது 29, 30 ஆனாலும்கூட வற்புறுத்த மாட்டேன் என்கிறார்கள். சிலர் இன்னும் ஓரிரு வருடங்கள் பெண் இருந்தால் வீட்டு கமிட்மெண்ட்ஸ் எல்லாம் முடித்துவிட்டு நாமும் கொஞ்சம் வாழ்க்கையை என்ஜாய் பண்ணலாம்!" என்று பேசாமல் இருந்து விடுகிறார்கள்.

அனைவரையும் சொல்லவில்லை... ஒருசில பர்சன்டேஜ்தான்!...இன்றைய பெண்களிடம் 'இது நிச்சயம் ஒரு வெற்றிகரமான திருமணமாக அமையும்!' என்ற நம்பிக்கை இல்லை. நல்ல படிப்பு, நல்ல நிறுவனத்தில் வேலை, சுறுசுறுப்பான பையன் இதுபோன்ற அஸ்திவாரங்கள் நன்றாக இருக்கிறது.

என் எதிர்கால மணவாழ்க்கை 40, 50 வயதுகளிலும் சிறப்பாகவே இருக்கும் என்று நினைக்காமல் 'ஹைட் 2 இன்ச் கூடுதலாக எதிர்பார்க்கிறேன். கலர் கொஞ்சம் பத்தாது' என்று தான் எடுக்கப்போகும் திரைப்படத்திற்கு ஹீரோ செலக்ட் பண்ணும் பாணியில் கணவரை செலக்ட் பண்ணுவது.

தனக்கு வரப் போகும் கணவர் இந்த மாதிரி நல்ல படிப்பு படித்து, வேலையில் இருக்கிறார், நல்ல ஒழுக்கத்துடன் வளர்க்கப் பட்டிருக்கிறார் என்றால்.. அதற்கு அவரது பெற்றோர்களின் பொறுமை, தியாகம், அன்பு காரணம் என்கிற அடிப்படை உண்மையை மறந்துவிட்ட மாதிரியாய், 'பேரண்ட்ஸ் கூட இருந்தா சரியா வராது' என்று பேசுவது.

இவ்வாறெல்லாம் சிந்தித்து வயசு கூடிக் கொண்டே போய் திருமணம் முடிப்பதால் இவர்கள் வாழ்க்கையில் இழப்பது என்னென்ன தெரியுமா?

பெற்றோருக்கும் வயது ஏறிக்கொண்டே போவதால் அவர்களுக்கும் 70 வயதுக்கு மேல் ஆகி உடல் நலக்குறைவால் அவதிப்படுவது.

வயது காலத்தில் பெற்றோர் ஆதரவில் சீரும் சிறப்புமாக நடக்க வேண்டிய திருமணத்தை பெற்றோரின் வயோதிகம் அல்லது இழப்பு காரணமாய் தானே நடத்திக் கொள்ள வேண்டிய நிலை.

கருத்தரிக்க வேண்டிய வயது தாண்டி விடுவதால் ஒரு குழந்தையை கண்ணால் பார்க்க...

கருத்தரிப்பு மையம், மருத்துவர், மருத்துவப் பரிசோதனை என்று அலைச்சலுக்கு அலைச்சல், மன உளைச்சல், செலவுக்கு செலவு போன்ற துன்பங்களுக்கு ஆளாதல்.படிக்க வைத்து ஆளாக்கி நிம்மதிப் பெருமூச்சு விட வேண்டிய நேரத்திலிருக்கும் 60 +வயது பெற்றோர்கள் மகளின் திருமணத் தடையால் ஒருவித குற்ற உணர்விற்கு ஆளான மாதிரி உறவினர் நண்பர்களை ஒதுக்கி தனிமைப்பட்டு மன உளைச்சலால் பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள்.

இதனால் பெற்றோரின் சந்தோஷத்தை, நிம்மதியான வயோதிக வாழ்க்கையை அனுபவிப்பதைப் பார்க்கும் வாய்ப்பையே இந்தப் பெண்கள் இழக்கிறார்கள்.



ஒரு காட்டில் இருந்த சிங்கம் தன்னை எப்பொழுதும் நான் தான் பலசாலி, நான் தான் பலசாலி என்று தற்பெருமை பேசிக் கொண்டிருந்தது. சிங்கத்தின் செயல் மற்ற விலங்குகளுக்கு எரிச்சலை

# ஒரு குட்டிக்கதை:-
# ஆணவச் சிங்கத்தை அடங்கிய எறும்பு !

S.Surya
STD VII
SHERWOOD HALL SENIC SECONDARY SCHOOL
CHENNAI



ஏற்படுத்தியது.

ஆனால் மற்ற விலங்குகளால் சிங்கத்தின் தற்பெருமையை அடக்க வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தன.


இந்நிலையில் அதே காட்டில் உள்ள ஒரு குளத்தில் நட்சத்திர ஆமை ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த குளத்தை ஒட்டி ஒரு மரத்தில் அணில் ஒன்று வாழ்ந்து வந்தது. நட்சத்திர ஆமையும், அணிலும் உயிர்த் தோழர்களாகப் பழகி வந்தனர். ஒரு நாள் அந்த வழியாக வந்த சிங்கம், மரத்தின் மேல் அமர்ந்திருந்த அணிலைப் பார்த்து, மூடனே நான் கீழே இருக்கிறேன். நீ எனக்கு மரியாதை கொடுக்காமல் மேலே இருக்கிறாய். அப்படியென்றால் நீ என்னைவிட பெரியவனா? என்று கோபமாக கர்ஜித்தது.

மேலும் அணிலை கீழே இறங்கி வந்து தன்னை வணங்கி நிற்கும்படியும், அப்படி செய்யாவிட்டால் தண்டனை கடுமையாக இருக்கும் என்றும் கூறியது. சிங்கத்தைப் பார்த்து பயந்த அணில் உடனே கீழே வந்து வணங்கி நின்றது.

சிங்கம் சொன்னபடி அணில் செய்ததும் சிங்கம் அங்கிருந்து சென்றது. சிங்கம் சென்றதும் குளத்தை விட்டு வெளியே நட்சத்திர ஆமை வந்தது. தன் நண்பன் அவமானத்தால் தலை குனிந்து நிற்பதைக் கண்ட ஆமை, சிங்கம் சொன்னதற்கு ஏன் கவலைப்பட்டு தலைகுனிந்து நிற்கிறாய்? உலகில் வலிமை உள்ளவர்கள், வலிமை அற்றவர்களை அடக்கி ஆள்வது தானே வழக்கம்? யானையிடம் சென்று சிங்கத்தால் இப்படி சொல்ல முடியுமா? என்று ஆறுதல் சொன்னது. நண்பா! சிறியவர் பெரியவர் என்று யாராக இருந்தாலும் அவரவர் படைப்புக்கும், வேற்றுமைக்கும் ஏற்றபடி அவரவர் பலசாலிகள் தானே? என்று கொதித்தது. நண்பா! உன் ஆதங்கம் எனக்குப் புரிகிறது. சிங்கத்தின் ஆணவத்தை அடக்கத்தான் வேண்டும். ஆனால் அதை எப்படி செய்யலாம்? என்று அணிலும், ஆமையும் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது அங்கே ஒரு கட்டெறும்பு வந்தது.

நண்பர்களே! நீங்கள் பேசியதைக் கேட்டு நானும் கோபம் கொண்டேன். சிங்கத்தின் ஆணவத்தை நான் அடக்குகிறேன். அதோ அந்த மரத்தின் அடியில் தானே அந்த சிங்கம் உறங்கும். நாளை அங்கே வந்துவிடுங்கள். யார் பலசாலி என்று நிரூபிக்கிறேன் என்று அந்த மரத்தில் சென்று தங்கிக் கொண்டது. மறுநாள் வழக்கம்போல சிங்கம் அந்த மரத்தின் அடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தது. ஆமை கல்லுக்கடியில் மறைந்துகொண்டது. அணில் புதருக்குள் ஒளிந்துகொண்டது. எறும்பு சிங்கத்தின் காதுக்குள் மெதுவாக நுழைந்து கொண்டு இம்சைப்படுத்தியது. சிங்கம் வலி தாங்க முடியாமல் அலறியது. நீ பெரிய பலசாலிதானே, முடிந்தால் உன்னைக் காப்பாற்றிக் கொள் என்று எறும்பு கூறியது. அணிலும், ஆமையும் தைரியமாக வெளியே வந்தன. ஒரு கட்டெறும்பிடம் தன் பலம் பலிக்காமல் போனதும், சிங்கம் வெட்கப்பட்டு தலைகுனிந்து தன் ஆணவத்தை கைவிட்டது. சிங்கம் படும் துன்பத்தை பார்த்த ஆமையும், அணிலும், சிங்கத்தை விட்டுவிடும்படி எறும்பிடம் கூறின. உடனே எறும்பும் சிங்கத்தின் காதுக்குள் இருந்து வெளியே வந்தது. பிறகு சிங்கம் தான் மட்டும் பலசாலி என்று சொல்வதை விட்டுவிட்டது. சிங்கம், ஒவ்வொருவரிடமும் ஒரு தனித்திறமை இருக்கும் என்றும், யாரையும் கேவலமாக எண்ணக்கூடாது என்பதையும் புரிந்து கொண்டது.

நீதி : ஒவ்வொருவரிடமும் ஒரு தனித்திறமை இருக்கும், யாரையும் பலம் குறைவாக எண்ணிக் கொண்டு தற்பெருமை பேசுதல் கூடாது.





# ஆன்மிக தீபம் அணைந்ததே

**கா**ஞ்சி ஜெயேந்திர சுவாமிகள் குறைந்த ரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு மூச்சுத்திணறல் காரணமாக காஞ்சிபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்*சிகிச்சை பலன் இல்லாமல் காஞ்சி ஜெயேந்திர சுவாமிகள் மருத்துவமனையில் 28/02/2018 அன்று காலமானார்..

அவரை இழந்து வாடும் ஆன்மீக அன்பார்களுக்கு ஆழ்ந்த இரங்கலை மித்ரா டைம்ஸ் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்...

- ஆசிரியர்

# சொல்லின் செல்வர் வாரியார்




**ஒ**ரு முறை அவருடைய சொற்பொழிவு நடந்த பொழுது சில பேர் இடையில் எழுந்து வெளியே சென்றனர். அப்பொழுது வாரியார் , 'சொல்லின் செல்வன்' என்று அனுமனைக் குறிப்பிடுகிறார்கள்.

இங்கேயும் சில 'சொல்லின் செல்வர்கள்' இருக்கிறார்கள். நான் நல்ல விஷயங்களைச் சொல்லின், அதைக் கேட்காமல் செல்வதைத் தான் சொல்கிறேன்" என்று பேச்சின் இடையே அவர்களை மென்மையாக அங்கதச் சுவையுடன் சாடினார். அதற்குப் பிறகு யாரும் அந்த இடத்தை விட்டு அகலவில்லை. முருகப் பெருமானின் துணைவி வள்ளி நாயகிக்கு அந்தப் பெயர் வந்ததற்கு வாரியார் புதுமையான ஒரு விளக்கத்தினைத் தருவார்: "முருகப் பெருமானின் மனைவியை 'வள்ளி' என்று ஏன் அழைக்கிறோம்? முருகன் நாம் கேட்டதை எல்லாம் தரும் 'வள்ளல்'. வள்ளல் என்பது ஆண்பால், அதன் பெண்பால் வள்ளி. ஆக, வள்ளலின் மனைவி 'வள்ளி' ஆனார்!வாரியார் நகைச்சுவைத் திறனைப் பறைசாற்றும் ஓர் எடுத்துக்காட்டு: "கள்ளைக் குடித்தால் தான் போதை தரும் என்பது இல்லை. 'கள்' என்று சொன்னாலே போதும். பலர் மயங்கி விடுகிறார்கள். ஒருவரை 'நீ' என்று சொல்லுவதற்குப் பதில் 'நீங்கள்' என்று சொல்லிப் பாருங்கள். அவர் எளிதில் மயங்கி விடுவார். எல்லாம் அந்தக் 'கள்' செய்யும் வேலைதான்."இதே போல், கரூரில் வாரியார் ஆற்றிய தொடர் சொற்பொழிவு முடிவடையும் நாள். பாராட்டிப் பேசியவர் ஒருவர், 'மீண்டும் வாரியார் பேச்சை எப்பொழுது கேட்போமோஞ்?' என்ற ஏக்கத்தோடு, 'மீண்டும் கருருக்கு எப்போது வருவீர்கள் சுவாமி?' என்று ஆர்வத்துடன் கேட்டார். அதற்கு வாரியார், "கருருக்கா? கருருக்கு (கருவூருக்கு) மீண்டும் வரக்கூடாது என்பதற்காகத் தானே இத்தனை ஆண்டுகள் இறைவனை வேண்டிப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். என்னை மீண்டும் கருருக்கு வாருங்கள் என்று சொல்கிறீகளேஞ்?" என்றாரே பார்க்கலாம். அரங்கம் கர ஒலியால் அதிர்ந்தது! வாரியார் மனைவி அமிர்தலட்சுமி காலமானார். மற்றவர்கள் கலங்கினர். அவர் இயல்பாக இருந்தார். "அவளுக்கு உரிய ஸ்டேஷன் வந்தது. இறங்கி விட்டாள். அடுத்த ஸ்டேஷனில் இறங்க நாமும் ஆயத்தமாக இருப்போம்" என்றார். யாரால் இப்படிக் கூற முடியும்? வாழ்வில் இடுக்கண் வந்து தாக்கும் வேளையிலும் எவரால் இவ்வாறு நகைச்சுவை உணர்வுடன் பேச முடியும்?

நன்றி திரு. லெட்சுமணன்

- கொளத்தூர் குமரன்

# இறைவனிடம் வேண்டுவது எப்படி?



வேண்ட தெரியாமல் வேண்டினால் பலன் வேறு மாதிரி இருக்கும். அதற்கு ஒரு சுவாரஸ்மான கதை உண்டு.. வைர வியாபாரி ஒருவன் தன் வைரங்கள் அனைத்தையும் விற்றுவிட்டு பணத்தை ஒரு முட்டையில் கட்டிக்கொண்டு தன் சொந்த ஊருக்கு வந்து கொண் டிருந்தான்.

அவன் தன் ஊருக்கு செல்ல ஒரு ஆற்றை கடக்க வேண்டி இருந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக அந்த ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வெள்ளத்தை பொருட்படுத்தாத வைர வியாபாரி நீரில் இறங்கி எப்படியாவது ஆற்றை கடந்து சென்றுவிடலாம் என்று எண்ணி அந்த ஆற்றில் இறங்கினான்.

அப்போது வெள்ள நீர் அவனை நிலை தடுமாற செய்தது. இதனால் அவன் தன் பண முட்டையை வெள்ளத்தில் தவறவிட்டான். உடனே ஐயோ என் பண முட்டையை வெள்ளம் அடித்து செல்கிறதே யாரேனும் காப்பாற்றுங்கள் என்று கதறினான். அந்த ஆற்றில் மீன் பிடித்துக்கொண்டிருந்த ஒரு மீனவனின் காதில் இந்த வைர வியாபாரியின் கதறல் சத்தம் கேட்டது. உடனே அவன் ஆற்றில் குதித்து கடுமையாக போராடி அந்த பணமுட்டையை எப்படியோ மீட்டு எடுத்துக் கொண்டு கரையை அடைந் தான். பின் இந்த பண முட்டையை காப்பாற்ற சொல்லி யாரோ கதறினீர்களே, நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்? நான் உங்கள் பண முட்டையை மீட்டுக்கொண்டு வந்துவிட்டேன். வந்து பெற்றுக் கொள்ளுங்கள் என்று சத்தமாக அழைத்தான். ஆனால் வெகு நேரம் ஆகியும் யாரும் அதை பெற்றுக்கொள்ள வரவில்லை.

பிறகு தான் அவனுக்கு புரிந்தது, அந்த பண முட்டைக்கு சொந்தக்காரர் ஆற்று வெள் ளத்தில் அடித்து செல்லப்பட்டார் என்று. ஐயோ பாவம், அந்த பணக்காரர் இந்த பண முட்டைக்கு பதிலாக தன்னை காப்பாற்றுங்கள் என்று குரல் கொடுத்திருந்தால் இந்த பண முட்டையை விடுத்து நான் அவரை காப்பாற்றி இருப்பேனே. ஆனால் அவர் இப்படி செய்துவிட்டாரே என்று அந்த மீனவன் வருந்தினான். இப்படி தான் நாமும் நம் தேவைகளை சில நேரங்களில் இறைவனிடம் வேண்டத் தெரியாமல் வேண்டுகிறோம். அதனால் பல நேரங்களில் நாம் நம் வாழ்வில் நிம்மதியை இழக்க நேரிடுகிறது. எனவே இறைவனிடம் வேண்டும் போது, நிதானமாக வேண்டுதல் வைக்க வேண்டும்

## மாணிக்கவாசகர் சொன்ன மாதிரி...

நிதானமாக வேண்டுதல் வேண்டும்*
வேண்டத்தக்கது அறிவாய் நீஞ்
வேண்ட முழுதுந் தருவோய் நீஞ்
வேண்டும் அயன் மாய்கரியோய் நீஞ்
வேண்டி என்னைப்
பணிகொண்டாய்ஞ்
வேண்டி நீயாதருள் செய்தாய்ஞ்
யானும் அதுவே வேண்டினல்லால்ஞ்
வேண்டும் பரிசொன்றுண்டென்னில்ஞ்
அதுவும் உன்றன் விருப்பன்றேஞ்
*பொருள்*
அய்யனே எனக்கு வேண்டியது
உனக்குதெரியாதா?
நான் வேண்டியதை நீ தராமல்
மறுப்பாயே
நீ தரும் பரிசை நீ விரும்பி தரும்போது
என்னால்
அதை மறுக்கவோ தடுக்கவோ
முடியுமா
அதுவும் உன்விரும்பம் தானே

Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue,
9, Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at
SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021.
Editor : M.SUNDARAMOORTHY.